REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 டிசம்பர் 20 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 300 | Tuesday 20, December, 2022 | 12பக்கங்கள் | 50/-

சிரேஷ்ட பிரஜைகளுக்கும் மாணவர்களுக்கும்

மிருகக்காட்சிச்சாலைகளை இலவசமாக பார்வையிட அனுமதி

23ஆம் 24ஆம் திகதிகளில் விசேட ஏற்பாடு

லோரன்ஸ் செல்வநாயகம்

பாடசாலை மாணவர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு எதிர்வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் மிருகக்காட்சி சாலைகளை இலவசமாக பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக விலங்கியல் பூங்கா திணைக்களம் தெரிவித்துள்ளது. இரண்டு தினங்கள் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் 23 ஆம் திகதி பாடசாலை மாணவர்கள் மிருகக்காட்சிசாலைகளை பார்வையிட 04

சுற்றுலா அபிவிருத்தி சபை, முப்படை, பொலிஸார் இணைந்து

ஜனாதிபதி அலுவலக வளாக சூழலில் விசேட கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி

ஜனாதிபதி பங்கேற்பு; இன, மத பேதமின்றி மக்கள் ஒன்றுகூடல்

ஜனாதிபதி அலுவலக வளாகத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சுற்றுலா அபிவிருத்திச் சபை, முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து ஏற்பாடு செய்திருந்த விசேட கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி உள்ளிட்ட கொண்டாட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (18) மாலை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

காலி முகத்திடலை அண்மித்த பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்ச்சியைக் காண பெருந்திரளான மக்கள் 04

அரசின் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த

இளம் அதிகாரிகளுக்கு அதிக வாய்ப்பு வழங்க அரசு தயார்

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவிப்பு

சவால்களுக்கு மத்தியில் நாட்டின் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவிப்பு

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இளம் அரச உத்தியோகத்தர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கத் தயார் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் அரச அதிகாரிகள் பெரும் செல்வாக்குச் செலுத்த முடியும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதியின் செயலாளர், அதற்காக அரச உத்தியோகத்தர்கள் பெரும் பங்களிப்பைச் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவையின் 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த 04

அடுத்த மாதம் முதல் கடுமையான தீர்மானம்;

கட்டணம் செலுத்த தவறியோரது நீர் விநியோகம் துண்டிப்பு

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவிப்பு

கட்டணம் செலுத்தத் தவறிய பாவனையாளர்களுக்கான நீர் விநியோகம் அடுத்த மாதம் முதல் துண்டிக்கப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

40 சத வீதமானோர் கட்டணம் செலுத்த தவறியுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க குறிப்பிட்டார்.

8,000 மில்லியன் ரூபா வரை காணப்பட்ட நிலுவை 04

பேராதனை பல்கலைக்கழகத்தின் கல்வி செயற்பாடுகள் வழமைக்கு

நேற்றுடன் தொழிற்சங்க நடவடிக்கைகள் நிறைவு

பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பேராசிரியர்கள் மேற்கொண்டுவந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் நேற்றுடன் (19) நிறைவடைந்துள்ளது.

அதன்படி இன்று முதல் கலைப்பீடத்தின் கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று இடம் பெறும் என பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட பேராசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரான பேராசிரியர் 04

உலக அறிவிப்பாளர் B.H. அப்துல் ஹமீத்தின் "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடந்தது. உலக நாயகன் கமல்ஹாசன் நூலின் முதல் பிரதியை பிரபல பாடகி பி. சுசிலாவுக்கு வழங்கி இதனை வெளியிட்டு வைத்தார்.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் 370 வகையான மருந்துகள்

இலங்கைக்கு வழங்க இந்திய அரசு இணக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்

இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் 370 வகையான மருந்துகளை இலங்கைக்கு பெற்றுக்கொடுப்பதற்கு இந்திய அரசாங்கம் இணக்கம் 04

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் விடயங்களில் அரசு தலையிடாது

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ உறுதியளிப்பு

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் அரசாங்கம் தலையிடவில்லை என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு சுயாதீனமான அமைப்பாகும். தேர்தலை நடத்துவதற்கான முழு அதிகாரமும் அதற்கு உண்டு. 04

சர்வதேச தர பயிற்சி பெற்றவர்களுக்கே இனி வெளிநாடுகளில் பணிப்பெண் வேலை

அடுத்த வருடம் மார்ச் முதல் கடைப்பிடிக்க அரசு தீர்மானம் 03

தினேஷ் ஷாப்டர் படுகொலை சம்பவம்: கையடக்க தொலைபேசி குறுஞ்செய்திகள் தொடர்பில் கூடுதல் கவனம்

03

போதைப்பொருள் பாவனை உச்ச நிலையில்;

மாணவர்களை பாதுகாக்க ஆசிரியர்களுக்கு பயிற்சி

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

போதைப்பொருள் பாவனையிலிருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்க ஆசிரியர்களுக்கு 04

அங்கவீனர்களுக்கான உபகரண விலைகளில் அதிகரிப்பா?

பொய் வதந்தி என்கிறார் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

லோரன்ஸ் செல்வநாயகம்

அங்கவீனர்களுக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்களின் விலைகள் நூற்றுக்கு 400 வீதமாக அதிகரித்துள்ளதாக பரப்பப்படும் வதந்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது என்றும், அதனை முற்றாக நிராகரிப்பதாகவும் 04

54 அரச நிறுவனங்கள் தொடர்ந்தும் நட்டத்தில்

வருடாந்தம் 86,000 கோடி ரூபா நட்டம்

லோரன்ஸ் செல்வநாயகம்

பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனம் உள்ளிட்ட 54 அரச நிறுவனங்கள் தொடர்ந்தும் நட்டமீட்டி வருவதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த 04

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட ஏற்பாடு;

சிற்றுண்டிச்சாலைகள் மீது தீவிரமான கண்காணிப்பு

சுமார் 3000 அதிகாரிகள் கடமையில்

லோரன்ஸ் செல்வநாயகம்

நத்தார், புது வருடம் உள்ளிட்ட பண்டிகைக் காலங்களில் மக்களுக்கு சிறந்த உணவுகளை 04

போலி இந்திய கடவுச்சீட்டுக்களுடன்

இலங்கை பெண்கள் இருவர் சென்னையில் அதிரடி கைது

விசாரணைகளில் அதிர்ச்சி தகவல்கள் கசிவு

போலி இந்திய கடவுச்சீட்டை பயன்படுத்தி இலங்கைக்கு வருகை தர முயன்ற இரு பெண்களை சென்னை சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரிகள் சனிக்கிழமை (17) கைது செய்துள்ளனர். பயணிகள் கங்கா (46) மற்றும் 04

ஹங்வெல்லயில் உணவக உரிமையாளர் சுட்டுக்கொலை

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கைவரிசை

(பாதுக்க நிருபர்)

ஹங்வெல்ல பிரதேசத்தில் நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். 04

பெரும்போக பயிர்ச்செய்கையின் போது: பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு

657 மில்லியன் ரூபா பகிர்ந்தளிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

2021 - 2022 ஆம் ஆண்டுகளில் பெரும்போக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கும் 04

தலைமன்னாரிலிருந்து கடல் மார்க்கமாக

சட்டவிரோதமாக இந்தியா செல்ல முயன்ற ஐவர் கைது

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக இந்தியாவிற்கு செல்ல முற்பட்ட 04

கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை அர்த்தமுள்ளதாக்குவோம்

திருவருகைக்காலம் நிறைவு பெறும் நிலையில் நம் ஆண்டவர் இயேசு மனித உருவில் பாலகனாக இந்த அவணியில் பிறந்த கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடுவதற்கு நாம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றோம்.

கொரோனா தாக்கம் காரணமாக கடந்த வருடம் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் களைகட்டவில்லை என்றே சொல்லலாம்.

எனினும் இம்முறை பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மக்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்காக ஆயத்தமாவதைக் காண முடிகின்றது.

"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்" என்கிறது சத்திய வேதம். அந்த வகையில் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கி உள்ள மக்களுக்கு இம்முறை கிறிஸ்மஸ் விடுதலையின் செய்தியை வழங்கும் என நம்புவோம்.

அதேபோன்று உலக மீட்பர் இயேசு பிறந்த செய்தி முதல் முறையாக அரசர்களுக்கு செல்வந்தர்களுக்கு அன்றி இடையர்களுக்கே தெரிவிக்கப்பட்டது. அந்த வகையில் நெருக்கடிகள், பிரச்சினைகள், கஷ்டங்கள், துயரங்கள் என அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு இயேசு பிறப்பின் செய்தி ஆறுதலைத் தருவது உறுதி.

நம் ஆண்டவர் இயேசுவினுடைய பிறப்பின் நோக்கம் மக்களுக்கு விடுதலையும் சமாதானமும் பெற்றுக் கொடுப்பதாகும். பாவத்திலும் அடிமைத்தனத்திலும் வாழும் மக்கள் விடுதலையடைய வேண்டும், ஏழைகள் புறந்தள்ளப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் மறுவாழ்வு பெறவேண்டும். அனைத்து மக்களும் இவ்வுலகில் ஒன்றுபட்டு மகிழ்ச்சியுடன் பகிர்ந்து வாழவேண்டும் என்பதே அதன் நோக்கமாகும்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பை உலகம் முழுவதும் அர்த்தமின்றி கொண்டாடி வருகின்ற நிலையை தற்போது காண முடிகிறது. மிகவும் ஏழ்மை நிலையில் எளிமையான முறையில் நடைபெற்ற அவரது பிறப்பு நிகழ்வு மிகவும் ஆடம்பரமான முறையில் கொண்டாடப்படுகின்றது.

ஏழைகளையும் குழந்தைகளையும் மகிழ்விக்க செயல்பட்ட நிக்கலஸ் என்ற நத்தார் பப்பாவை நினைவுகூர அவருடைய விருப்பத்துக்கும் நம் ஆண்டவர் இயேசுவின் நோக்கத்துக்கும் மாறான செயற்பாடுகளையே நாம் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் மூலம் காணக் கிடைக்கின்றது

வருடம் தோறும் கிறிஸ்மஸ் பண்டிகையை உலகம் மிகவும் சிறப்பாக கொண்டாடுகின்றது. ஆனால் மனித மனங்கள் இன்றும் மாற்றமடையவில்லை. ஏழைகள் ஏழைகளாகவே வாழ்கின்றனர். பணக்காரர்கள் மேலும் மேலும் செல்வந்தராகின்றனர்

வசதி படைத்த மக்கள் வானளாவ உயர்ந்த கிறிஸ்மஸ் மரத்தை வைக்கின்றனர். ஏழைகள் கிறிஸ்மஸ் நாளில் கூட ஒரு நேர நல்ல உணவுக்காக ஏங்குகின்றனர். இன்றும் நாம் வாழும் சமூகத்தில் ஏழை எளியவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், அங்கவீனர்கள் என பல்வேறு நிலையில் உள்ள மக்களை நாம் சந்திக்கின்றோம்.

இயேசு எம்மை சந்தித்து எமக்கு வழங்கிய ஆசீர்வாதத்தையும் அன்பையும் இரக்கத்தையும் மன்னிப்பையும் அத்தோடு கூட எம்மால் முடிந்த உதவிகளையும் அவர்களுக்கு நாம் செய்தால் அதுவே அர்த்தம் உள்ள கிறிஸ்மஸ் கொண்டாட்டமாக அமையும்.

அவ்வாறு நாம் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்பட்டால் இந்த மண்ணில் ஏழ்மை அகலும் அத்துடன் ஏழ்மை கோலத்தில் பிறந்த இயேசு உண்மையில் அதன் மூலம் மகிழ்ச்சியடைவார்.

லோரன்ஸ் செல்வநாயகம்...

தேவையில் இருப்போருக்கு உதவுவோம்

பிறரன்பு பணிகள் வழியாக ஈர்க்கப்பட்டு ஆழ்ந்த ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்ட கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார் ஆயர் தியோடர்.

திருவருவகைக் காலம் குறித்த மடலில் இவ்வாறு அழைப்புவிடுத்துள்ள ஆயர் பிறரன்புப் பணிகள், பரிவிரக்கம், கருணை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை ஒன்றிணைந்து கொண்டாட அனைவரையும் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் வரும் முதல் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் இது என்றும் இப் பெருந்தொற்று மக்கள் அனைவருக்கும் சொல்லொணாத் துயரத்தையும் வேதனையையும் தந்தது என்றும் எடுத்துரைத்துள்ள ஆயர் அவர்கள், இவ்விழாவை அர்த்தமுள்ள வகையில் கொண்டாடும் விதத்தில் ஏழை எளிய மக்களுக்கு உதவுமாறும் அனைவரையும் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திருவருகைக் காலத்தில் கடவுள் நம்மை எவ்வளவு அன்பு கூர்ந்திருக்கிறார், இன்னும் எவ்வளவு நம்மை அன்பு கூரவிருக்கிறார் என்பதை நாம் சிந்திப்போம். “நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ள நமதாண்டவர் இயேசுவின் புதிய கட்டளைக்குப் பதில்மொழி கொடுக்க நாம் முயலவேண்டும்.

ஒவ்வொரு குடும்பமும் மற்றும் துறவறக் குழும்மும் தியாகங்களைச் செய்ய முன்வரவேண்டும், இத்திருவருகைக் காலத்தில் பிறரன்புப் பணிகளுக்கு நன்கொடைகள் வழங்க முன்வரவேண்டும்.

இதனைக் கொண்டே வறுமையில் உழல்வோருக்கும், தேவையில் இருப்போருக்கும் நாம் உதவமுடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எம்மில் பிறப்பாரா?

வானத்து எல்லையெங்கும் வண்ணப் பூச்சொரியும்
கார் காலத்து ஓர் இரவு களிப்பான மார்கழியில்
ஞாலத்து இருளகற்ற நம் பாவம்தனை மீட்க
காலத்தின் தேவைக்காய் கன்னி மகன் அவதரித்தார்

ஒளியாக வந்த இந்த உத்தமனாம் இறை மைந்தன்
வழியாக எம் வாழ்வில் வந்து பிறப்பாரா?
துளிகூட அமைதியின்றி துன்புறும் சோதரரின்
துயரைத் துடைக்க மனத் துணிவைத் தருவாரா?

ஆயுதமே வேதமென்றும் அடக்குமுறை கொள்கையென்றும்
அன்பை வெறுப்பவர்க்கு நற் பண்பைத் தருவாரா?
ஆணவத்தின் பிடியினிலே அல்லலுறும் இப்பூமி
காண்பதற்கு புது உலகக் கதவு திறப்பாரா?
மனிதத்தைத் தொலைத்து விட்ட மகத்தான பூமியிலே
தனிமனித நேயத்தை தரணியெங்கும் விதைப்பாரா?
வன்முறைகள் சூழ்ந்த இந்த வக்கிர பூமியிலே
துன்பநிலை மாற்றி அன்புப் பூப்பூக்க வைப்பாரா?

கண்டதே காட்சி என்ற கசப்பான நிலை மாற்றி
கொண்டதே உயர்வு என்ற குடும்ப நிலை அமைப்பாரா?
உதயத்து விடிவெள்ளி உலகுக்கு ஒளியூட்ட
எம் இதயத்தைப் புதுப்பிக்க எம்மில் பிறப்பாரா?

கண்மணி

கிறிஸ்மஸ் பண்டிகையும் சுவாரஸ்யமான பின்னணியும்

இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினம் தான் கிறிஸ்மஸ் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால் இயேசுநாதர் எப்போது பிறந்தார், கிறிஸ்துமஸ் என்ற வார்த்தையின் பின்னணி ஆகியவை சுவாரஸ்யமானது.

கிறிஸ்துமஸ் என்ற வார்த்தை "கிறிஸ்ட் மாஸ்" என்ற 2 வார்த்தைகளின் இணைப்பு மூலம் உருவானது. இயேசு கிறிஸ்து பிறந்த ஆண்டு சரியாக தெரியவில்லை என்பதால், கிமு 7க்கும் கிமு 2க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் பிறந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

அதுபோன்றே யூதர்களின் பருவகாலம், நாள் காட்டிகள் மூலம் கணக்கிட்டு ஒரு யூக அடிப்படையில் தான் டிசம்பர் 25ஆம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடப்படுவதாக சில வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முதன் முதலில் 4 வது நூற்றாண்டைச் சேர்ந்த மேற்கத்திய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக சில வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. ஆனால் வேறு சில பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்து, ஜனவரி 6ஆம் திகதி இயேசு பிறந்ததாகவும் கொண்டாடினர்.

எவ்வாறு இருப்பினும் கிறிஸ்மஸ் பண்டிகையை உலகம் முழுவதும் வாழும் கிறிஸ்தவ மக்கள் மிகச் சிறப்பாக்க் கொண்டாடி மகிழ்கின்றனர். இந்த தினத்தை விசேஷமாக கருதுவதால் அன்றைய தினம் பல புதிய பணிகளைத் தொடங்குவதையும் அவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

கிபி 800ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையன்று சார்லிமேனி என்ற பேரரசன் மன்னராக பதவியேற்றான். அதன் பிறகு கிபி 855ம் ஆண்டு இட்முண்ட் என்ற தியாகி மன்னராக மூடி சூட்டப்பட்டார். கடந்த 1066ம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் வில்லியம் மன்னராக முடிசூட்டப்பட்டார். மேலும் 1377ம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் ரிச்சார்ட் 2 கிறிஸ்துமஸ் பண்டிகையை மிக விமரசையாகக் கொண்டாடினர். கடந்த 1643ம் ஆண்டு இந்தோனேஷியாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தீவுக்கு "கிறிஸ்மஸ் தீவு" என்று பெயரிடப்பட்டது.

இவ்வாறு கிறிஸ்மஸ் பண்டிகை மக்களிடையே பிரபலமடைந்து, பின்னர் உலகமெங்கும் விமரிசையாக கொண்டாடும் வழக்கம் உருவானது.

கிறிஸ்மஸ் பண்டிகையன்று மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள பரிசுப் பொருட்களை பரிமாறிக் கொள்வதும், போட்டிகளை நடத்துவதும் என்று பல கோணங்களில் கொண்டாட்டம் விரிவடைந்தது.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக முதன் முதலில் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம், 1510ம் ஆண்டும் ரிகா என்ற இடத்தில் தொடங்கியது. கடந்த 1836ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அலபாமா என்ற பகுதியில் அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டது. 1840ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதன் முதலாக கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கம் தொடங்கியது.

கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கரோல் கீதங்கள் இசைக்கப்படுவது வழக்கம்.. குழந்தை இயேசுவை வாழ்த்தியும் அவரது பிறப்பு, அவர் உலகில் வந்த நோக்கம் உள்ளிட்ட கருத்துகளை வைத்து இத்த பாடல்கள் பாடப்படுவது வழக்கம்.

கடந்த 1847 ஆம் ஆண்டு பிரான்சில் தான் முதன் முதலாக கிறிஸ்மஸ் கரோல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ரோல் நிகழ்வில் "ஓ ஹோலி நைட்" என்ற பிரபல கிறிஸ்மஸ் பாடல் பாடப்பட்டதாக கூறப்படுகிறது.

கிறிஸ்மஸ் பண்டிகைய்யொட்டி வரலாற்றில் சில ருசிகரமான சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளன.

பண்டைய காலத்தில் வாழ்ந்த பாரசீகர்களும் பாபிலோனியர்களும் கிறிஸ்மஸ் பண்டிகையை வருடத்தின் சிறந்த நாளாக்க் கொண்டாடி வந்துள்ளனர். கிறிஸ்மஸ் பண்டிகையன்று பாரசீக நாட்டில் உள்ள எல்லா அடிமைகளுக்கும் ஒருநாள் விடுதலை அளிக்கப்பட்டுள்ளது.மேலும் சிலர் தங்கள் அடிமைகளை பரிசாக பரிமாறிக் கொண்டுள்ளனர். சில எஜமான்கள் கிறிஸ்மஸ் பண்டிகையன்று மட்டும் அடிமைகளுக்கு வீட்டில் முழு சுதந்திரம் கொடுத்ததாகவும் வரலாற்றில் குறிப்புகள் உள்ளன.

பண்டைய காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் பேய், பிசாசு, அசுத்த ஆவிகள் உள்ளிட்டவைகளுக்கு அதிகமாக பயந்தனர். வருடத்தில் நீண்ட இரவு கொண்ட நாட்களில் அவை மக்களுக்கு தீமை விளைவிக்கும் என்று நம்பினர். இதனால் நீண்ட இரவுகளுக்கு பிறகு சூரியன் உதிக்க வேண்டும் என்பதற்காக கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடி வந்துள்ளனர்.

மொத்தத்தில் நல்லது ஓங்கவும், தீயது அழியவும் இந்த நன்னாளை உலக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடி வருவது மகிழ்ச்சியே.

கீத்ஸ் ...

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 டிசம்பர் 20 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

தகவல் தொழில்நுட்பம் ஊடாக

கடந்த ஆண்டில் 150 கோடி டொலர்கள் வருமானம்

இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்

லோரன்ஸ் செல்வநாயகம்

தகவல் தொழில் நுட்ப கைத்தொழில் ஊடாக கடந்த 2021 ஆம் ஆண்டில் 150 கோடி அமெரிக்கன் டொலர்களை வெளிநாட்டு அந்நியசெலாவணியாக பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக நாட்டுக்கு பெருமளவு வெளிநாட்டு அந்நியசெலாவணியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ள அவர் அதற்கான விரிவான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் அரச மற்றும் தனியார் பிரிவுகளில் 20,000 வெற்றி

04

ஒப்பந்தக்காரர்களின் கொடுப்பனவுகளை முறையாக செலுத்த நடவடிக்கை

"பொதுவான முறையொன்றின் மூலம் அனைத்து ஒப்பந்தக்காரர்களினதும் கொடுப்பனவுகளை முறையாக செலுத்த நடவடிக்கை எடுப்பேன்." போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு பங்களிப்பு செய்த ஒப்பந்த நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையை வழங்குவது தொடர்பான பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு ஒப்பந்த நிறுவனங்கள் எதிர்நோக்கும் சிரமங்களையும் கருத்திற் கொண்டு அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் வேண்டுகோளுக்கு இணங்க நிதி அமைச்சு, திறைசேரியுடன் இணைந்து அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிணைமுறி பத்திரங்களை வெளியிடுதல் மூலம் ஒப்பந்த நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை தவணை முறையில் முறையாக செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிர்மாண ஒப்பந்தங்களை மேற்கொண்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் திறைசேரி இந்த பிணைமுறி பத்திரங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இன்னும் சில தினங்களில் வழங்கும் என அமைச்சர் தெரிவித்தார்.

நானு ஓயாவில் உருக்குலைந்த சடலம் ஒன்று மீட்பு

மனநலம் குன்றியவரதா என சந்தேகம்

தலவாக்கலை குறூப் நிருபர்

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா மாஹாஎலிய காட்டுப்பகுதியில் உள்ள ஆற்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவர்களால் துர்நாற்றம் வீசுவதை அவதானித்து பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் குறித்த காட்டுப் பகுதிக்குச்சென்ற நானுஓயா பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர். குறித்த பகுதியில் சடலமாக மீட்கப்பட்டவர் மனநலம் பாதிக்கப்பட்ட கடந்த ஒரு மாதமாக காணாமல் போனதாக

நாட்டைக் கட்டியெழுப்ப போராட வேண்டுமே தவிர அழிக்க அல்ல

தன்னிடம் வந்த போராட்டக்காரர்களுக்கு அமைச்சர் பிரசன்ன விடுத்த ஆலோசனை

போராட்டத்தினால் நாடு பின்னோக்கிச் சென்றதாகவும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே போராட்டம் இருக்க வேண்டுமே தவிர நாட்டை அழிப்பதற்காக அல்ல எனவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார். போராட்டம் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் சதித்திட்டங்களினால் நாட்டின் எதிர்காலம் ஆபத்தில் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.மினுவாங்கொடை புதிய வர்த்தக நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் வருகை தந்த போராட்டக்காரர்களுடனான கலந்துரையாடலில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த வர்த்தக நிலையத்தின் திறப்பு விழா (18) மினுவாங்கொடையில் இடம் பெற்றது. நகர அபிவிருத்தி அதிகாரசபையானது 395 மில்லியன் ரூபாவை செலவழித்து இந்த புதிய மூன்று மாடி வர்த்தக நிலையத்தை நிர்மாணித்துள்ளது.இந்த திறப்பு விழாவில் அண்மைக்கால போராட்டங்களில் கலந்து கொண்ட இளைஞர்கள் குழுவும் கலந்து கொண்டதுடன், தமது தேவை ஒன்றை நிறைவேற்றுவதற்காக அமைச்சரை சந்தித்தனர்.இந்த சூழ்நிலையிலேயே அந்த உரையாடல் நடைபெற்றது.அமைச்சர் பிரசன்ன ரணதுங்க; ஐஸ் போதைப் பொருள் பாவிப்பவர்கள் தான் இந்த போராட்டத்தை நடத்தினார்கள்.

04

இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்கு தயார்படுத்தும் நோக்கில் பட்ஜட்

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்

இந்தியாவின் அடுத்த வருடத்துக்கென தாக்கல் செய்யப்படவிருக்கும் வரவுசெலவுத் திட்டமானது அடுத்த 25 ஆண்டுகளுக்கு இந்தியாவை வளர்ச்சிக்காகத் தயார்படுத்துவதாக அமைந்திருக்குமென்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இந்திய பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கும் பட்ஜட் குறித்து நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த அவர், "உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா இருப்பதால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதன் வளர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்நிய முதலீட்டை இந்தியாவிற்குள் ஈர்ப்பதற்காக அரசாங்கம் நிறைய வசதிகள் மற்றும் விதிகளை மாற்றியமைத்துள்ளதுடன், நாட்டில் இணைந்து செயல்பட விரும்பும் தொழில்களுடன் சேர்ந்து செயல்படுகிறது" எனவும் கூறினார்.

நிர்மலா சீதாராமன் மேலும் கூறுகையில், "ஐரோப்பா உட்பட முன்னேறிய நாடுகளில் உள்ள நிறுவனங்களை ஈர்ப்பதற்கான உத்திகளையும் தொழில்துறையையும் உருவாக்க வேண்டும். அந்நாடுகள் சீனாவிலிருந்து தங்கள் உற்பத்தித் தளத்தை மாற்றுவதற்கான இடங்களைத் தேடுகின்றன. G20 குழுவின் புதுடில்லியின் தலைமையின் போது

இந்தியாவை கவர்ச்சிகரமான முதலீட்டு இடமாக அரசாங்கம் காண்பிக்கும்" என்று குறிப்பிட்டார்.

ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பெறுபேறுகள் ஒன்றரை மாதத்தில் வெளியிட எதிர்பார்ப்பு

உயர்தரப் பரீட்சை ஜனவரி 23ல்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை ஒன்றரை மாதத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

அதேவேளை 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் போது எஹெட்டுவெள பிரதேத்திலுள்ள பாடசாலையொன்றில் மாணவர்கள் முகங்கொடுக்க நேர்ந்த அசௌகரியங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட அதிகாரிகள் குழுவொன்றை அங்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவிக்கையில் இம்முறை 05ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை குறிப்பிடத்தக்க எந்தவித சிக்கல்களுமின்றி வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஒன்றரை

அல்லது இரண்டு மாதங்களுக்கு இடையில் பரீட்சை

04

சர்வதேச தர பயிற்சி பெற்றவர்களுக்கே இனி வெளிநாடுகளில் பணிப்பெண் வேலை

அடுத்த வருடம் மார்ச் முதல் கடைபிடிக்க அரசு தீர்மானம்

வெளிநாடுகளுக்கு வீட்டுப்பணிகளுக்காக பெண்கள் அனுப்பப்படுவது அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல் நிறுத்தப்படவுள்ளதோடு சர்வதேச தரத்திலான உயர்தர வீட்டு பராமரிப்பு உதவியாளர்களை பணிக்கு அனுப்ப தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்தையும் தாண்டியுள்ளது.

ஒரு வருடத்தில் மிகக் கூடுதலான இலங்கையர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மனுஷ நாணயக்கார இந்த விடயங்களை குறிப்பிட்டார். பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பல உலக நாடுகள் தமது நாட்டுப்

04

அரசியல்வாதிகள் 60 வயதில் ஓய்வு பெறும் தேரரின் கருத்து

ஊடக மாநாட்டில் GL பீரிஸ் வரவேற்பு

அரசியல்வாதிகள் 60 வயதில் ஓய்வு பெற்று இளைய தலைமுறையினருக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும் என ஸ்ரீவிமல தேரர் தெரிவித்துள்ளார்.

அரச பணியில் உள்ள மருத்துவர்கள், பொறியாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு அமுலாகும் சட்டம் அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை நேற்று சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச ஊழியர்களும் அறுபது வயதில் ஓய்வுபெற வேண்டும் என ஸ்ரீவிமல தேரர் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தினை பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் வரவேற்றுள்ளார்.

அறுபது வயதிற்குப் பிறகு மக்கள் உடல், மன மற்றும் உடல்நலப் பிரச்சினைகளையும் மற்ற பலவீனங்களையும் அனுபவிக்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதவி வெற்றிடம்

பிராந்திய விற்பனை நிறைவேற்று அதிகாரி (கிழக்கு மாகாணம்)

லேக் ஹவுஸ் என்று பரவலாக அறியப்படும் த அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஓப் சிலோன் லிமிடெட் (ANCL) இலங்கையில் அச்சு ஊடகத்தின் தாயகமாகவும் இதயமாகவும் உள்ளது. நாட்டின் முன்னோடியான அச்சு ஊடக நிறுவனம், 100 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றையும், 25 ஆண்டுகால நிகழ்நிலை (online) பிரசுரத்தையும் கொண்டுள்ளது என்பதுடன் அச்சு ஊடகத் துறையில் தொடர்ந்து முதலிடத்தை வகிக்கின்றது.

லேக் ஹவுஸ் விற்பனை பிரிவில் மேற்கண்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு பின்வரும் தகுதிகள் மற்றும் தேவைப்பாடுகளைக் கொண்ட திறமையான மற்றும் ஆற்றல் மிக்க நபரைத் தேடுகிறது.

தேவையான தகுதிகள் மற்றும் தேவைப்பாடுகள்:

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் வர்த்தகம் அல்லது முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம் அல்லது SLIM/CIM இன் அங்கத்துவம்
- சந்தைப்படுத்தல் நிறுவனத்தில் இரண்டு வருட கால அனுபவம்.
- எங்கள் செய்தி முகவர்களுடன் நல்லுறவைப் பேணுவதற்கான நல்ல தகவல் தொடர்பு திறன்.
- விற்பனை அல்லது சந்தைப்படுத்துதலுக்கான பண்பு ஒரு தனித்துவமான நன்மையாக இருக்கும்.
- இலகுரக வாகனங்களுக்கு செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் விண்ணப்பதாரரின் பெயரில் வாகனம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- அபேட்சகருக்குச் சொந்தமான வாகனம் மேலதிக தகுதியாக இருக்கும்.
- கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் விண்ணப்பதாரர் விரும்பத்தக்கது.

வயது: 35 வயதிற்குக் கீழ்

வேலைக்கான நிபந்தனைகள்:
ஒப்பந்த அடிப்படையில் நியமனம் மேற்கொள்ளப்படும் என்பதுடன் செயற்றிறனின் அடிப்படையில் ஒப்பந்த காலம் புதுப்பிக்கப்படலாம்.

சம்பளம்:
தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரருக்கு தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கேற்ப கவர்ச்சிகரமான மற்றும் பேச்சுவார்த்தைக்குட்பட்ட ஊதியப் பொதி வழங்கப்படும்.

விண்ணப்பங்கள்:
இந்த விளம்பரம் பிரகரமான 7 வேலை நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு உறையின் மேல் இடது மூலையில் தற்போதுள்ள நிலையைக் குறிப்பிட்டு உங்கள் கய விபரத்தை (CV) உறவினரல்லாத இரண்டு சான்று பகர்வோரின் பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்களுடன் அனுப்பவும் அல்லது உங்கள் CV யை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கும் பதவியைக் விடயத்தலைப்பில் குறிப்பிட்டு மின்னஞ்சல் செய்யவும்.

LAKE HOUSE

மனிதவள பிரதானி,
த அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஓ.ப் சிலோன் லிமிடெட்,
இல. 35, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10.
hc@lakehouse.lk

தினேஷ் ஷாப்டர் படுகொலை சம்பவம்:

கையடக்க தொலைபேசி குறுஞ்செய்திகள் தொடர்பில் கூடுதல் கவனம்

விசாரணைகள் வேறு கோணத்திற்கு செல்லலாம் என்றும் ஊகம்

கார் மற்றும் உடலில் இருந்து கைரேகை பதிவுகள்

லோரன்ஸ் செல்வநாயகம்

தினேஷ் ஷார்டரின் படுகொலை தொடர்பில் பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் அதிர்ச்சியான தகவல்களும் அவற்றில் உள்ளடங்குவதாக விசாரணையில் ஈடுபட்டுள்ள குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மேலும் தகவல்களை வெளியிடக்கூடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, படுகொலை செய்யப்பட்டுள்ள பிரபல தொழிலதிபர் தினேஷ் சாப்டர் கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் விட்டுச் செல்லப்பட்ட இடம் மற்றும் அவரது சடலத்தில் பதிந்திருந்த கைரேகைகளின் அறிக்கை இன்று குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அவர் பயணம் செய்த கார் மற்றும் அவரது உடலிலிருந்து எடுக்கப்பட்டுள்ள கைரேகைகள் ஆகியன பகுப்பாய்வு செய்யப்பட்டு குற்றப் பதிவில் உள்ள சந்தேக நபர்களின் கைரேகைகளுடன்

04

இலங்கையின் 25ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா பொறுப்பேற்பு

ஸாதிக் ஷிஹான்

இலங்கையின் 25ஆவது கடற்படைத் தளபதியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ள வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா நேற்று முன்தினம் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்திற்கு வருகை தந்த புதிய தளபதி கடற்படை சம்பிரதாய முறைப்படி வரவேற்கப்பட்டத்துடன், மதத் தலைவர்களின் ஆசிர்வாதங்களுக்கு மத்தியில் முதலாவது ஆவணத்தில் கையொப்பமிட்டு கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

04

ஜனாதிபதி அலுவலக வளாக சூழலில்...

இன, மத பேதமின்றி ஜனாதிபதி அலுவலக வளாகத்தைச் சுற்றி திரண்டிருந்தனர்.

நிகழ்ச்சியைக் காண்பதற்காக அங்கே குழுமியிருந்த மக்களிடம் ஜனாதிபதி சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டிருந்ததுடன் அவர்கள், ஜனாதிபதிக்கும் அமோக வரவேற்பளித்தனர். அங்கு வருகை தந்திருந்த சிறுவர்களிடம் விவரங்களை கேட்டறிந்த ஜனாதிபதி, அவர்களுடன் புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டார்.

முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த பாடகர் குழுவினரின் பங்குபற்றுதலுடன் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சியும் ஆரம்பமானது. டி.எஸ் சேனாநாயக்கவின் சிலைக்கு முன்பாக உள்ள படிக்கட்டுகளில் அமர்ந்திருந்த ஜனாதிபதி, அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருடன் இணைந்து கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சியை பார்வையிட்டார்.

இந்த கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி மற்றும் கொண்டாட்டங்கள் டிசம்பர் 23 ஆம் திகதி வரை இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறும். இதேவேளை, ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் இசைக் குழுக்களின் பங்கேற்புடன் பேண்ட் வாத்திய இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளதுடன், ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான கிறிஸ்மஸ் மரத்தை பொதுமக்கள் கண்டுகளிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ்...

தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ள மேற்படி 370 வகை மருந்துப் பொருட்களும் அடுத்த மாதம் நாட்டை வந்தடையுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டுக்கு மிக அத்தியாவசியமான 14 வகை மருந்துகளில் ஏழு வகை மருந்துகளை ஒருவருட தேவைக்காக இலங்கைக்கு வழங்குவதற்கு சீன அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சீனாவிலிருந்து கிடைக்கப்பெறும் மேற்படி மருந்துப்பொருட்கள் விரைவில் நாட்டுக்கு கிடைக்குமென்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மருந்துகள் தொடர்பில் சிலசில அசௌகரியங்கள் நிலவுவதை தாம் ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர் எவ்வாறாயினும் மருந்துப்பொருள் இறக்குமதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த முடியுமானளவு அதனை முறையாக முன்னெடுத்துச் செல்ல முடிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மருந்துப் பொருட்கள் தொடர்பில் எத்தகைய தகவல்களையும் மறைப்பதில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர் அனைத்து தகவல்களையும் பாராளுமன்றத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இலங்கைக்கு தேவையான அனைத்து மருந்துகள் தொடர்பான பட்டியலொன்றை இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

54 அரச நிறுவனங்கள்...

54 நிறுவனங்களும் வருடாந்தம் 86 ஆயிரம் கோடி ரூபா நட்டத்தில் இயங்குவதாகவும் கடந்த வருடத்தில் இந்த அனைத்து நிறுவனங்களும் 86 ஆயிரம் கோடி ரூபா நட்டமீட்டியுள்ளதாகவும் இந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை 420 அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் அரசாங்க பராமரிப்பில் உள்ளதாகவும் அத்துடன் அரச நிறுவனங்களின் 32 நிறுவனங்கள் மோசடி நிறைந்ததாகக் காணப்படுவதாகவும் அதற்கான தரவுகளை 'கோப்' அண்மையில் வெளியிட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நட்டமீட்டும் நிறுவனங்களில் முன்னணியில் உள்ள நிறுவனங்களாக முறையே பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனம், இலங்கை மின்சாரசபை ஆகியன இனங்காணப்பட்டுள்ளதாகவும், அந்த நிறுவனங்கள் கடந்த 3 வருடங்களில் 30 ஆயிரம் கோடி ரூபாவை நட்டமீட்டியுள்ளதாகவும் இந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை பெற்றோலியக கூட்டுத்தாபனமானது இவ்வருடத்தின் முதல் 4 மாதங்களில் 62 ஆயிரத்து 800 கோடி ரூபாவை நட்டமீட்டியுள்ளதாகவும் ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனம் 24 ஆயிரத்து 800 கோடியையும் மின்சார சபை 4700 கோடியையும் நட்டமீட்டியுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கிணங்க நட்டமீட்டும் 39 அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிற்றுண்டிசாலைகள் மீது...

விற்பனை செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் உள்ள சிற்றுண்டிச் சாலைகளை சோதனையிடும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்த வகையில் நாடு முழுவதிலும் உள்ள 365 பொது சுகாதார பிரிவுகளை இலக்காகக் கொண்டு இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அதற்காக 3200ற்கும் அதிகமான பொது சுகாதார பரிசோதகர்களை ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சிற்றுண்டிசாலைகளையும் சோதனையிடும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. அந்த வகையில் நாட்டின் பிரதான நகரங்களில் உள்ள அனைத்து சிற்றுண்டிச் சாலைகளும் முதற்கட்டமாக சோதனைக்கு உட்படுத்தப்படும்.

நாடளாவிய ரீதியில் 365 பொது சுகாதார பிரிவுகள் இயங்குகின்றன. அந்த பிரிவுகளை இலக்காகக் கொண்டு இந்த சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க சிற்றுண்டிச் சாலைகளை சோதனையிடுவதற்கு 3200க்கும் அதிகமான பொது சுகாதார பரிசோதகர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கவீனர்களுக்கான உபகரண...

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கையின் அடிப்படையில் அங்கவீனர்களுக்கான உபகரணங்களின் விலைகள் எவ்விதத்திலும் அதிகரிப்பப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் வரி கொள்கை காரணமாக அங்கவீனர்கள் பயன்படுத்தும் உபகரணங்களின் விலைகளும் அதிகரித்துள்ளதாகவும் சில உபகரணங்கள் 400 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் சில தரப்பினர் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளனர். அதன் காரணமாக நபரொருவரின் ஆயுட்காலம் 50 வயதாக குறைவடையலாம் என்றும் மிக மோசமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தத் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை. அரசாங்கமானது அங்கவீனர்கள் உபயோகிக்கும் எந்தவித உபகரணங்கள் மற்றும் பொருட்களுக்கும் வற் வரியையோ அல்லது துறைமுக வரியையோ ஏனைய வரிகளையோ அறவிடுவது கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஹங்வெல்லவில் உணவக...

அதே பகுதியில் வசித்துவந்த 46 வயதுடைய உணவக உரிமையாளர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த உணவக உரிமையாளர் பாதுக்கை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், தப்பியோடிய சந்தேக நபர்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை, களுத்துறை பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் கூரிய ஆயுதத்தால் நபர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தொடங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்த தாக்குதலில் களுத்துறை தெற்கு பகுதியை சேர்ந்த 30 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளார். குடும்பத் தகராறு காரணமாக இந்த கொலை இடம் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

கையடக்க தொலைபேசி... (03ஆம் பக்கம் பார்க்க)

ஒப்பிட்டுப் பார்க்கப்படவுள்ளன.

அதேவேளை, மேற்படி படுகொலை தொடர்பில் இதுவரை சில வாக்குப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில்,தினேஷ் ஷாப்டரின் மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களிடமும் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட வுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

படுகொலை செய்யப்பட்டுள்ள தினேஷ் சாப்டரின் கையடக்கத் தொலைபேசியில் இருந்து முன்னாள் கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமசுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளமை

அவர் படுகொலை செய்யப்பட்ட பின்னரா என்பது தொடர்பில் விசாரணையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

அந்த குறுஞ்செய்தி படுகொலை செய்தவரால் தினேஷ் சாப்டரின் தொலைபேசி ஊடாக அனுப்பப்பட்டுள்ளதாக நம்பப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அந்த குறுஞ்செய்தியில் "நான் உங்களுக்காக காத்திருக்கிறேன்" என்று தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தினேஷ் சாப்டர் வீட்டில் இருந்து புறப்பட்டுள்ள நேரம் மற்றும் அவர் பாதிக்கப்பட்டு பொரளை பொது மயானத்திலிருந்த நேரம் உள்ளிட்ட அனைத்து சம்பவங்களையும் ஆராயும் போது மேற்படி சந்தேகம் எழுவதாகவும் விசாரணையில் ஈடுபட்டுள்ள குழுவினர் தெரிவித்துள்ளனர். அவரது குடும்பத்தினர் உட்பட பல்வேறு வகையிலும் மேற்கொள்ளப்படும் வாக்குமூலங்கள் இந்த விசாரணைகளை வேறு கோணத்திற்கு கொண்டு செல்லலாம் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் 25ஆவது.... (03ஆம் பக்கம் பார்க்க)

இதுவரை காலம் கடற்படைத் தளபதியாக சேவையாற்றிய அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே கடற்படையின் பிரதம அதிகாரியாக செயற்பட்ட ரியர் அட்மிரல் பிரியந்த பெரேரா இலங்கையின் 25ஆவது கடற்படைத் தளபதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய 2022 டிசம்பர் மாதம் 18ஆம் திகதி முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர் ரியர் அட்மிரல் தரத்திலிருந்து வைஸ் அட்மிரலாக தர முயர்த்தப்பட்டுள்ளார்.

கொழும்பு, ரோயல் கல்லூரியில் தனது பாடசாலை கல்வியை நிறைவு செய்த வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, 1987ஆம் ஆண்டு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 13வது ஆட்சேர்ப்பின் மூலம் இலங்கை கடற்படையில் இணைந்து கொண்ட இவர், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் திருகோணமலை கடற்படை மற்றும் கடல்சார் கலாசாலை ஆகியவற்றில் அடிப்படை பயிற்சிகளை பூர்த்தி செய்து கொண்டு உப லெப்டினன்டாக 1989ஆம் ஆண்டு வெளியேறியுள்ளார்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கற்கையில் முதுமாணிப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட இவர் அவுஸ்திரேலிய வொல்லொங்கொங் பல்கலைக்கழகத்தில் கடல்சார் கொள்கை வகுப்பு கற்கையில் முதுமாணிப் பட்டத்தையும் சீன மக்கள் இராணுவத்தின் தேசிய பாதுகாப்பு கல்லூரியில் பாதுகாப்பு மற்றும் மூலோபாய கற்கையும் நிறைவு செய்துள்ளார்.

இலங்கை கடற்படையில் சுமார் 35 வருடங்களாக சேவையாற்றி வரும் இவர் கடற்படையின் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்து வந்துள்ளதுடன் இறுதியாக கடற்படையின் பிரதம அதிகாரியாக செயற்பட்டுள்ளார்.

கடற்படையின் திறமையான அதிகாரிகளில் ஒருவரான இவர், பாதுகாப்பு படையின் உயர் அதிகாரிகளுக்கு சேவை பாராட்டு அடிப்படையில் வழங்கப்படும் ரண சூர பதக்கம், உத்தம சேவா பதக்கம், போன்ற பதக்கங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐந்தாமாண்டு... (03ஆம் பக்கம் பார்க்க)

பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இன்று அல்லது நாளை விடைத்தாள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி குறுகிய காலத்தில் இந்தப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் ஆராயப்படும்.

அதேவேளை கா.பொ.த. உயர்தரப்பரீட்சை எதிர்வரும் ஜனவரி 23ம் திகதி நடவத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை மே மாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள கா.பொ.த. சாதரண தர பரீட்சைக்கான முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இளம் அதிகாரிகளுக்கு அதிக...

ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதியின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நாட்டைப் பொறுப்பேற்று படிப்படியாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக 2012ஆம் ஆண்டு அரச நிர்வாக சேவை அதிகாரிகள் ஆற்றிய பணியையும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இதன் போது பாராட்டினார்.

"Be the impact" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவையின் 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஒன்றுகூடலில் அதன் தலைவர் சுரங்க ரணசிங்க உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் அத்துறையில் கடமையாற்றிய 2012 ஆம் ஆண்டுக் குழுவின் சிரேஷ்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த ஆண்டில்... (03ஆம் பக்கம் பார்க்க)

காணப்படுவதாகவும் அதற்கு தேவையான இளைஞர் யுவதிகளை ஊக்குவிப்பதே அமைச்சின் பொறுப்பாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். டிஜிட்டல் கல்வி கொள்கையொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தனியார் துறை மூலம் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிந்துவரும் 50,000 க்கும் மேற்பட்டவர்கள் நாட்டுக்கு அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொடுப்பதில் பெரும் பங்களிப்பை மேற்கொண்டுவருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடுத்த வருடத்தில் 34,000 இளைஞர் யுவதிகளை இந்தத் துறையில் இணைத்துக்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

53 ரூபாவுக்கு முட்டைகளை... (03ஆம் பக்கம் பார்க்க)

எனக்குறிப்பிட்டுள்ள அவர் எனினும் அவர்கள் அதிகரித்த விலைக்கு முட்டைகளை விற்பனை செய்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன குறிப்பிடுகையில், இந்தப் பண்டிகைக் காலங்களில் முட்டையின் அதிகரித்த விலை மற்றும் தட்டுப்பாடு காரணமாக பெரும்பாலான பேக்கரி உரிமையாளர்கள் கேக் உற்பத்தியிலிருந்து விலகியுள்ளதாகவும் அதனால் கேக் வகைகளின் விலைகள் மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவித்துள்ளார்.

நானு ஓயாவில்... (03ஆம் பக்கம் பார்க்க)

தேடப்பட்டு வந்த சுமார் 51 வயது மதிக்கத்தக்க ஓர் ஆண் எனவும் குறித்த சடலம் உருக்குலைந்த நிலையில் துர்நாற்றம் வீசுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கட்டணம் செலுத்த தவறியோரது...

தொகை, 4000 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக மீண்டும் 6,000 மில்லியன் ரூபா கட்டணம் நிலுவையில் உள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவி பொதுமுகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், 60 நாட்களுக்கு மேல் கட்டணம் செலுத்த தவறிய அனைத்து பயனாளர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 08 இலட்சம் மக்கள் 03 மாதங்கள் அல்லது அதற்கும் அதிக நாட்கள், நீர் கட்டணம் செலுத்த தவறியுள்ளதாக ஏக்கநாயக்க வீரசிங்க தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின்...

அதுல சேனாரத்னவும் அவரது மகனும் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரையாளர்கள் கடமையிலிருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்படி கடந்த 13ஆம் திகதி முதல் நேற்று வரை கலைப்பீட பேராசிரியர்கள் பரீட்சை கடமைகள் உட்பட சகல கடமைகளில் இருந்தும் விலக நடவடிக்கை எடுத்திருந்தனர். எவ்வாறாயினும், இன்று காலை முதல் மீண்டும் வழமைபோல் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக பேராதனை பல்கலைக்கழக கலைப் பீட பேராசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேராசிரியர் அதுல சேனாரத்ன மீதான தாக்குதல் தொடர்பில் இதுவரையில் சுமார் 12 பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஆரம்ப கட்டநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதன் செயல்பாட்டில் அரசாங்கம் தலையிடாது என்று உறுதியளித்தார்.

இதேவேளை, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இன்றைய தினம் (20) கூடவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதி மற்றும் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் திகதிகள் குறித்து கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களை பாதுகாக்க...

பயிற்சிகளை ஆரம்பிக்கும் நோக்கில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் நேற்று (19) நடைபெற்ற போதைப்பொருள் பாவனையிலிருந்து பாடசாலை மாணவர்களை மீட்பது தொடர்பில் இங்கு விவாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் 200 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அண்மையில், மேல்மாகாணத்தில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 75 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பெண்கள் இருவர்...

சொர்ணகலா (22) என இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இரண்டு பெண்களும் சென்னை முகவரியுடன் கூடிய இந்திய கடவுச்சீட்டையும் இலங்கைக்கான சுற்றுலா விசாவையும் தயாரித்துள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. இருப்பினும், அதிகாரிகள் அவர்களின் தரவுத்தளத்தை சரிபார்த்தபோது, அவர்களின் கடவுச்சீட்டு போலியானது என்பதைக் கண்டறிந்து பயணிகளை விமானத்தில் ஏற விடாமல் தடுத்தனர்.

விசாரணையில், குறித்த பெண்கள் இலங்கை பிரஜைகள் என்பதும், சுற்றுலா விசாவில் சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னைக்கு வந்து தங்கியிருப்பதும் தெரிய வந்தது.

இவர்கள் போலி கடவுச்சீட்டு பெற முகவர் நிலையத்துக்கு பணம் கொடுத்துள்ளனர்.

மேலதிக விசாரணைக்காக சென்னை பொலிஸ் மத்திய குற்றப்பிரிவின் (சிசிபி) போலி கடவுச்சீட்டு பிரிவில் குறித்த பெண்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பெரும்போக பயிர்ச்செய்கையின் போது:...

செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 657 மில்லியன் ரூபாவை விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை பெற்றுக்கொடுத்துள்ளது.

வரட்சி, வெள்ளம் மற்றும் காட்டு யானைகளினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளினால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை கவனத்திற்கொண்டு இந்த நட்டஈடு வழங்கப்பட்டு வருவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் 31,613 விவசாயிகளுக்கு 42,934 ஏக்கர் பயிர்ச்செய்கைக் காணிகளுக்காக நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு இதில் பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளது என்றும் அந்த வகையில் அங்குள்ள விவசாயிகளுக்கு 81 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக இந்தியா...

குற்றச்சாட்டில் ஐவர் தலைமன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக இந்தியாவிற்கு செல்ல குழுவொன்று தயாராக இருப்பதாக கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் (18) கடற்படையினர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது 03 ஆண்களும் 02 பெண்களும் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். பேசாலை, வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளை சேர்ந்த இவர்கள் (18) மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மிருகக்காட்சிசாலைகளை...

முடியுமென்றும் அன்றைய தினம் மாணவர்களுக்கான விசேட நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 24 ஆம் திகதி 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் மிருகக்காட்சிச் சாலைகளைப் பார்வையிட முடியும் என்றும் அத்துடன் கிறிஸ்மஸ் தினமான எதிர்வரும் 25 ஆம் திகதி மிருகக்காட்சிச் சாலைகளில் விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்ப... (03ஆம் பக்கம் பார்க்க)

இதன் பின்னர் அந்த விஷயங்கள் நடக்க முடியாது. நீங்கள் உங்கள் வேலையைச் செய்யுங்கள்.

போராடுபவர்கள், ஐயா, நாங்கள் தவறு செய்தோம்.

அந்த மாதிரி வேலைக்கு இனி போக மாட்டோம். அமைச்சர் சரியாக வேலை செய்யுங்கள். உங்களை வழிநடத்தியவர்கள் இருந்தால், எங்களைப் போராட்டத்திற்கு அழைத்துச் சென்றவர்கள் இவர்கள்தான் என்று அவர்களின் பெயரை பொலிஸாரிடம் கொடுங்கள் என்றார்.

சர்வதேச தர பயிற்சி... (03ஆம் பக்கம் பார்க்க)

பிரஜைகளை வெளிநாடுகளுக்கு வேலைவாய்புக்காக அனுப்புவதன் மூலம் அந்த நெருக்கடியின் தாக்கத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றன.

அந்த வகையில், இலங்கையும் பயிற்சி பெற்ற மற்றும் திறன் விருத்தி கொண்ட ஊழியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வருகிறது. இருப்பினும் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு சென்ற இலங்கையர்கள் தொடர்பிலும் சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவ்வாறு செல்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து அதன் பின்னர் வெளிநாடு செல்பவர்களுக்கு தொழில் பாதுகாப்பும் ஏனைய சலுகைகளும் கிடைக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கல்விக்கான மனிதாபிமான உதவிகள் நாட்டை வளப்படுத்த வழிவகுக்கும்

- பிரதமர் தினேஷ் குணவர்த்தன

ஸம் ஸம் பவுண்டேசன் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் 2023 ஆம் ஆண்டின் கல்வி வருடத்தை முன்னிட்டு 'தரமான கல்வியினூடாக விழுமியமிக்க சமூகத்தை நோக்கி' என்ற தொனிப்பொருளில ஏழு கோடி ரூபா செலவில் நாடளாவிய ரீதியில் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் வேலைத் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஸம் ஸம் பவுண்டேசன் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் முப்தி யூசுப் ஹனிபா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரன்ஜித் மத்தும பண்டார, டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட முக்கிய பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அதேவேளை கண்டி மாவட்டத்திலுள்ள

25 மில்லியன் ரூபா செலவில் கண்டி மாவட்ட 4230 பாடசாலை மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

பாடசாலை மாணவர்களுக்கு இலவசக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் வைபவம் கண்டி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் ஸம் ஸம் பவுண்டேசன் பணிப்பாளர் முப்தி யூசுப் ஹனிபா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன் போது கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரன்ஜித் மத்தும பண்டார, கண்டி மாவட்ட மேலதிகச் செயலாளர் ஜே. பி. யூ. கே. ஜயரத்தன, மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எம். ஜி. அமரசிறி பியதாச, பேராதனைப் பல்கலைக்கழக பௌத்த பாலி பீடத்தின் பேராசிரியர் முவெத்தகம ஞானந்த தேரோ, மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சாரூடீன், கல்வி அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், சமயத் தலைவர்கள், அதிபர்மார்கள், மாணவர்கள் , சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

25 மில்லியன் ரூபா செலவில் கண்டி மாவட்டத்திலுள்ள 4,230 பாடசாலை மாணவர்களுக்கு இலவசமான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கொழும்பு நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்த்தன உரையாற்றும் போது...

கடந்த பத்து வருட காலமாக மனித சமூகத்திற்காக பங்காற்றியமை தொடர்பில் அதற்கு வலுசேர்க்கும் வகையில் அதனை மேம்படுத்

துவதற்காக நாங்கள் ஒன்று கூடியிருக்கிறோம். மனிதாபிமானச் செயற்பாடு மிகவும் பெறுமதிமிக்கது. ஸம் ஸம் பவுண்டேஷன் நிறுவனம் பற்றி குறுகிய நேரத்தில் காணொளியின் மூலம் காட்டப்பட்டது எமக்கு மட்டுமல்ல முழு சமூகத்திற்கும் விடுக்கும் செய்தியாகும்.

இஸ்லாமிய சமயம், நாட்டில் உள்ள பௌத்த மக்களுடனும் இந்நாட்டில் வாழும் ஏனைய மக்களுடன் ஒன்றிணைந்து மனித நேயத் தன்மையுடன் செயற்படும் மிகவும் உன்னதமான சமயம்.உணவுப் பொருட்களை ஒவ்வொரு வீடுகளிலுள்ள மக்களுக்கும் வழங்கி முழு உலக நாட்டையும் கட்டி எழுப்புவோம் என்று எங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக 75 வருடங்களுக்கு முன் பிரகடனப்படுத்தினார்கள். ஆனால் இந்த உணவுப் பிரச்சினை இன்னும் உலகத்தில் இருந்து கொண்டிருக்கிறது.எமது நாட்டிலும் இருந்து கொண்டிருக்கிறது.

ஸம் ஸம் நிறுவனம் புதிய பாதையில் பாரியளவிலான மனிதாபிமானச் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் ஒரு பலம் வாய்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனமாகக் காணப்படுகின்றது. எவற்றையும் பின்வாங்காமல் செய்ய முடியும் என்பதை ஒப்புவித்துள்ளது. அதே போன்று அரச சார்பற்ற நிறுவனங்களுக்குரிய தன்மைகளுடன் தனியார் பிரிவினரையும் இணைத்துக் கொண்டு முன்மாதிரியான பணிகளை செய்து வருகின்றது. அந்த வகையில் இத்தகைய செயற்பாடுகளுக்கு அரசாங்கம் என்ற வகையில் உள்ளார்ந்த ரீதியாக மதிப்பளிக்கின்றோம்.

எங்கள் சமூகத்திற்கு பல்வேறு பிரதேசங்களில் மனிதாபினமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாயின் மனிதப் பண்பும் இஸ்லாமிய சமயத்தில் விசேடமாகக் காணப்படும் ஒரு சிறப்பான பண்பாகும். இந்த நல்ல பண்பை மக்களிடத்தில் கொண்டு செல்வது மிகவும் பெறுமதிமிக்கது. எதிர்பார்ப்புக்களுடன் வாழுகின்ற குடும்பங்களானாலும் சரி சமூகங்களானாலும் சரி நல்ல வாழ்நிலையோடு வாழ்வதற்கான வழிகளை மேற்கொள்வது மிகவும் இலகுவான காரியம் அல்ல. மனிதர்களே வாழ முடியாத வீடுகளில் பெரியளவிலான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். மழை பெய்தால் ஒழுக்கு ஏற்படுகின்ற கூரை வீடுகளில் வாழ்கின்றனர். அதில் வாழும் சிறார்கள் எந்தளவு துன்பத்தை எதிர்நோக்குவார்கள். தாய்மார்கள் பிள்ளைகளின் உயிர் வாழ்வதற்காக பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றார்கள்.

நீங்கள் மனமிரங்கி கைகொடுத்து முயற்சிகளை வெற்றிபெறச் செய்துள்ள நிறுவனம் என்ற வகையில் எங்கள் சமூகத்தில் விசேடமாக உங்களைப் பார்க்கின்றோம்.இந்த முயற்சியை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு உங்களுக்கு பலம் அவசியம்.

என்னுடைய தந்தையார் 100 வருடங்களுக்கு முன்பு கல்வி கற்றது பிரபல்யமான அரசியல்வாதி டி. பி. ஜயாவிடத்திலேயே ஆகும். அவர் வீட்டின் அறையில் தங்கியிருந்து கற்றார். அவர் எல்லோரையும் ஒன்றிணைத்துக் கொண்டு செல்வதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொண்ட தலைவர். அந்த கௌரவத்தை வெற்றி பெறச் செய்வதற்கு நாம் எல்லோரும் ஒன்றிணைந்து கைகோர்த்து

எமது நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக உருவாக்குவதற்கு இந்த நிகழ்வு உறுதி செய்யும் என்பதில் ஐயமில்லை. அதேபோன்று நீங்களும் நாங்களும் சிங்கள மொழி நன்கு தெரிந்தவர்கள். ஆங்கில மொழியும் நன்கு தெரிந்தவர்கள் அதேபோன்று தமிழ் மொழியும் நன்கு தெரிந்தவர்கள். இங்கு உயர் தொழில் நுட்ப அறிவுக்கு ஏற்ப சமூகத்தில் சகலரும் உயர் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கவுள்ளதாக தெளிவாகக் காட்டப் பட்டது. அதற்கு அவசியம் நம்பிக்கையாகும். அந்த செயற்திட்டத்தை நாங்களும் வரவேற்கின்றோம்.

நாங்கள் பயணம் செய்த காலத்தை மீளவும் மேன்மேலும் மேம்படுத்துவதற்கான காலகட்டத்திலுள்ளோம். இளம் தலைமுறையினர் தான் எதிர்காலத்தின் தலைவர்கள் என்று ஜனாதிபதி அடிக்கடி கூறுவார். அந்த வகையில் நாங்கள் கடந்து வந்த பாதை கடந்து போய் விட்டது. நாளையுடன் முடிந்து போய் விடும். புதிய இளைஞர், யுவதிகளுக்கு எதிகாலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் ஸம் ஸம் நிறுவனம் முன்னெ

'தரமான கல்வியினூடாக விழுமியமிக்க சமூகத்தை நோக்கி' என்ற தொனிப்பொருளில் ஸம் ஸம் பவுண்டேசனால் 07 கோடி ரூபா செலவில் நாடளாவிய ரீதியில் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல்...

டுக்கும் வேலைத் திட்டம் மேலும் சக்தி பெற வேண்டும் என்றார்.

கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரன்ஜித் மத்தும பண்டார உரையாற்றும் போது,

இன்று ஸம் ஸம் நிறுவத்திற்கு ஒரு விசேட சிறப்பான தினம் ஆகும். அதே போன்று கண்டி மாவட்டமும் அதை விட விசேட சிறப்பினைப் பெறுகின்றது. ஸம் ஸம் நிறுவனத்திடம் ஆரம்பத்தில் இருந்து ஒரு நம்பிக்கை இருந்தது. அதில் முதலாவது காரணம்தான்.

இந்நாட்டை மாற்றமுறச் செய்ய வேண்டுமாயின் இந்த நாட்டில் மனிதர்கள் சிந்திக்கும் விதத்தை மாற்றம் செய்ய வேண்டும். சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் நாங்கள் ஒருவர் ஒருவரைப் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கான முதலாவது சந்தர்ப்பம் நாங்கள் ஒவ்வொருவர்களுக்கிடையே வெளிப்படைத் தன்மை இருத்தல் வேண்டும். இதனை நாங்கள் எப்படிச் செய்வது. இதைச் செய்வதற்கான வாய்ப்பாக அமைவது பாடசாலை, உயர் கல்வி நிறுவனம். கல்வியைப் பெற்றுக் கொள்ளுகின்றவர்கள். கல்வியை வழங்குகின்றவர்கள் அந்த வகையில் ஸம் ஸம் நிறுவனம் வயிற்றுப் பசியைப் போக்குவதற்கும் மனிதர்களுடையே சிந்தனையில் மாற்றத்தையும் கொண்டு வருவதற்கு எடுக்கின்ற அதிகள

களுக்கிடையே இருக்கின்ற நட்பையும் பரபஸ்பர உறவையும் மேம்படுத்துவற்கு பாரியளவில் பங்கேற்று வருகின்றனர்.

இந்நிறுவனத்தின் தலைவர் முப்தி யூசுப் ஹனிபா அவர்களது மனித குலநலப் பண்பானது எல்லோராலும் மனமகிழ்ந்து பாராட்டப்படக் கூடிய ஒருவர். அவருடைய உள்ளம் மிகவும் பரந்துபட்டது. எங்கள் எல்லோரிடத்திலும் அவ்வாறானதொரு உள்ளம் எந்த இடத்திலாவது இருந்துள்ளதா?

அதன் காரணமாக எமது எதிர்காலம் பற்றி கருத்திற் கொண்டு எமது பிள்ளைகளின் நலன்கருதி நாங்கள் விஹாரைக்குச் செல்லுகின்றோம். நாங்கள் பள்ளிகளுக்குச் செல்லுகின்றோம். நாங்கள் கோயில்களுக்கு செல்லுகின்றோம். நாங்கள் எல்லாம் பொது நலத் தன்மையோடு மனிதாபிமான நடவடிக்கை

விலான முயற்சிகளுக்கு நான் தனிப்பட்ட ரீதியாக பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்தது.

இவ்விடத்தில் முன்னாள் கல்வி அமைச்சர் டலஸ் அலஹப்பெரும இருக்கின்றார். நாங்கள் கடந்த காலத்தில் கண்டி மாவட்டத்தில் கல்வி நிர்வாகம் தொடர்பில் கல்வி நிர்வாகத்துடன் தொடர்புடைய 260 பேர்களை ஓர் இடத்தில் ஒன்று கூட்டி 'விதாய நாயக குசலாத்தா' அபிவிருத்தி என்ற வேலை திட்டத்தை எங்களால் முன்னெடுக்க முடிந்தது. அது 7 நாள் கொண்ட செயலமர்வு ஆகும். அதற்கு வருகை தந்தவர்களில் பலர் எங்களிடம் பல காரணங்கள் கூறினார்கள். அதில் ஒன்று தான் மிக நீண்ட இடைவேளைக்குப் பின்பு புதிய கல்வி பற்றிய தெளிவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது என்று கூறினார்கள். அந்த வகையில் கல்வியைப் பெற்றுக் கொள்பவர்கள் மட்டுமல்ல கல்வி நிர்வாக சேவையில் ஈடுபடுபவர்களும் கற்பித்தல்களில் ஈடுபடுபவர்களும் மற்றும் ஸம் ஸம் நிறுவனம் கல்வி தொடர்பில் முன்னெடுக்கும் செயற்பாடுகளையும் கருத்திற் கொண்டு நான் அளவிலா பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஸம் ஸம் நிறுவனம் வயிற்றுப் பசியைப் போக்குவதாக இருந்தாலும் சிந்தனையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக எடுக்கின்ற முயற்சி தொடர்பில் இங்கு கேட்டுக் கொண்டிருந்த அனைவரும் தெரிந்து இருக்க வேண்டும். தனிப்பட்ட ரீதியாக ஸம் ஸம் நிறுவனத்தின் நடவடிக்கைகளை நான் நன்கு அறிந்தவன் என்ற வகையில் ஸம் ஸம் நிறுவனம் மட்டும்தான் எங்களை மேற் கொண்டு வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே உரையாற்றும் போது,

ஸம் ஸம் நிறுவனம் இக்கால கட்டத்தில் பாடசாலை மாணவ சமூகத்திற்கு ஆற்றுகின்ற பணியானது மிகவும் காருண்யம் வாய்ந்த உன்னதமான பணியாகும். எதிர்காலத்தில் பாடசாலைக் கல்வியில் மாற்றம் செய்வது அவசியமாகும். எங்களுடைய நாட்டின் எதிர்காலத்தை பாரம் எடுக்கவுள்ள 43 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிள்ளைகள் இருக்கின்றார்கள். கடந்த காலங்களில் பௌத்த தேரர்கள், மௌலவிமார்கள், இந்து குருக்கள், கிறிஸ்தவ போதகர்கள் ஆகியோர்களது போதனைகளை சரியான முறையில் நாங்கள் பின்பற்றி இருந்தால் இன்று இவ்வாறானதொரு பிரச்சினை எழுந்து இருக்க முடியாது என்று கூறலாம்.

அந்த வகையில் நாங்கள் கடந்த காலங்கள் முழுவதும் எங்களுக்கு எதிகாலத்தில் சமூக மட்டத்தில் பொறுப்புக் கூற வேண்டி நிலை நாட்டின் பிரஜை என்ற அடிப்படையில் பிரச்சினைகள் எழுந்துள்ளது.

இந்த மூன்று வருட கால கட்டத்தில், நாடு கொரோனா தொற்று உலக பொருளாதார நெருக்கடி போன்ற சவால்களுக்கு முகம்கொடுத்துள்ளன.

ஸம் ஸம் பவுண்டேசன் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் முப்தி யூசுப் ஹனிபா உரையாற்றும் போது.....

நாட்டை கட்டி எழுப்புவதாயின் மக்களிடத்தில் உடல் உழைப்பு அவசியம். எமது நாட்டுக்கு வருகை தந்த இந்திய வம்சாவளி மக்கள் உடல் உழைப்பின் மூலம் தான் இந்நாடு கட்டி எழுப்பப் பட்டது. ஆனால் உடல் உழைப்பு மட்டும் போதாது. உறுதியான தொழில் நுட்ப அறிவும் இருத்தல் வேண்டும். இந்த தொழில் நுட்ப அறிவின் மூலம் பல்கலைக்கழகத்தின் ஊடாக தேர்ச்சி மிக்க கல்வி வளங்களைப் பெற்று வளர்ச்சி பெற வேண்டும். அதன் தரத்திற்கு ஏற்ப நாட்டை சிறந்த முறையில் கட்டி எழுப்ப முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN
திகைரன்
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் மார்கழி மாதம் 05ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 25

குறள் தரும் சிந்தனை

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு

மனத்தில் மாசு இல்லாதவர்களையே நண்பர்களாகப் பெற வேண்டும். மாசு உள்ளவர்களின் நட்பை, விலைகொடுத்தாவது விலக்கிட வேண்டும்.

அனைத்து வயற்காணிகளிலும் பயிர்ச்செய்கைக்கான திட்டம்

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் போஷாக்குக் குறைபாட்டைத் தவிர்த்துக் கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளார். அவை பல ஊக்குவிப்பு திட்டங்களை உள்ளடக்கிய பரந்துபட்ட நடவடிக்கைகளாக அமைந்துள்ளன.

உணவு உற்பத்தி விவசாயப் பொருளாதாரத்தில் தெற்காசியாவில் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இந்நாடு, இவ்வருடத்தின் ஆரம்பப் பகுதியில் உணவு நெருக்கடிக்கும் போஷாக்கு குறைபாட்டுக்கும் உள்ளாகும் அச்சுறுத்தலை எதிர்கொண்டது. அதற்கு உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைத்துறை குறித்து முன்னெடுத்த தவறான வேலைத்திட்டங்கள் காரணமாக அமைந்திருந்தன. அதன் காரணத்தினால் இது தொடர்பில் உள்நாட்டில் மாத்திரமல்லாமல் சர்வதேச அமைப்புகள் மட்டத்திலும் அதிக அக்கறையுடன் கவனம் செலுத்தப்பட்டது. அந்த அளவுக்கு நிலைமை உருவாகி இருந்தது.

இந்த நிலையில்தான் ஜனாதிபதி, உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் போஷாக்கு குறைபாட்டைத் தவிர்த்துக் கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்தத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கலானார். இதன் நிமித்தம் தேசிய மட்டத்திலும், மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டத்திலும் பல குழுக்கள் அமைக்கப்படவும் அவர் ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

அதேநேரம் உணவுப் பயிர்ச்செய்கை உற்பத்தியை மேம்படுத்தும் நடவடிக்கைகளை விவசாய அமைச்சின் தலைமையில் முன்னெடுக்கவும் தேவையான அறிவுறுத்த ல்க ளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப விவசாய அமைச்சு வேலைத்திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றது. அவற்றில் உணவுப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான பசளையை எவ்வித குறைபாடுகளும் இன்றி நியாய விலையில் பெற்றுக் கொடுக்கவும் சில மாவட்ட விவசாயிகளுக்கு பசளையை இலவசமாக வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நாட்டில் உணவுப் பாதுகாப்பையும் போஷாக்கு குறைபாட்டையும் தவிர்க்கும் நோக்கில் இவ்வாறு பரந்த அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இருந்தும் கூட இன்னும் பெருந்தொகையான ஏக்கர் வயல் நிலங்கள் செய்கை பண்ணப்படாதிருப்பதாகத் தெரியவந்துள்ளது. குறிப்பாக ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்கள் வயல் நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாதிருப்பதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

உணவு நெருக்கடிக்கு நாடு முகம்கொடுப்பதைத் தவிர்ப்பதற்குத் தேவையான உணவு உற்பத்தி மேம்பாட்டு நடவடிக்கைகள் விஷேட ஊக்குவிப்புகளுடன் முன்னெடுக்கப்படுகின்ற இன்றைய சூழலில் இவ்வளவு தொகை ஏக்கர் வயல் நிலங்கள் செய்கை பண்ணப்படாதிருப்பது ஆச்சரியத்திற்குரிய விடயம் என்பதில் ஐயமில்லை. அதேநேரம் இது நியாயப்படுத்தக் கூடியதுமல்ல.

மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்படும் இந்த உணவு உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். இது இந்நாட்டு பிரஜைகள் அனைவரதும் பொறுப்பாகும்.

இந்த நிலையில்தான், ஒரு இலட்சம் ஏக்கர்களுக்கும் மேற்பட்ட வயல் நிலம் செய்கை பண்ணப்படாதிருப்பது குறித்து அரசாங்கம் விஷேட கவனம் செலுத்தியுள்ளதோடு, அந்நிலங்களை சுவீகரிப்பது குறித்தும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிடுகையில், 'செய்கை பண்ணப்படாதுள்ள அனைத்து வயல் நிலங்களையும் ஐந்து வருடங்களுக்கு சுவீகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்படும் வயல் நிலங்கள் பயிர்ச்செய்கைக்காக இளம் சமூகத்தினருக்கு வழங்கப்படும். அதற்கு ஏற்ப கமத்தொழில் சட்டத்தில் விரைவில் திருத்தம் செய்யப்படும்' என்றுள்ளார்.

'இவ்வாறு சுவீகரிக்கப்படும் வயற்காணிகள் பயிர்ச்செய்கைக்காக இளம் சமூகத்தினருக்கு வழங்கப்படுகின்ற போதிலும், வயற்காணி உரிமையாளருக்கு காணிக்கான கூலியும், அறுவடையின் போது ஒரு பங்கும் கிடைக்கப்பெற வழிவகை செய்யப்படும்' என்பதையும் அமைச்சர் குறிப்பிட்டுக் கூறத் தவறவில்லை.

நாட்டிலுள்ள அனைத்து வயற்காணிகளையும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தி, உணவு உற்பத்தியில் மேம்பாடு அடைவதை நோக்காகக் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதை இந்நடவடிக்கைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்படும் இத்திட்டத்திற்கு ஆரதவும் ஒத்துழைப்பும் அளிப்பது அவசியம். இதன் ஊடாக உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி போஷாக்கு குறைபாட்டையும் தவிர்த்துக் கொள்ள முடியும். இன்றைய காலகட்டத்தில் நாட்டின் முன்பாக இருக்கும் முக்கிய தேவைகளில் இதுவும் ஒன்று எனலாம். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்கவும் முடியாது.

editor.tkn@lakehouse.lk

தமிழ்மொழிக்கான சமஉரிமையை எக்காலமும் வலியுறுத்தி வந்துள்ள லங்கா சமசமாஜக் கட்சி

கொழும்பு தலைமையகத்தில் இன்று 88 ஆவது சம்மேளனக் கூட்டம்

லங்கா சமசமாஜ கட்சியின் 88 ஆவது சம்மேளன கூட்டம் இன்று கொழும்பிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெறுகிறது. 1935 ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் திகதி லங்கா சமசமாஜக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. ல.ச.ச.கட்சியானது இன்று வரையில் அனைத்து இன மக்களையும் அரவணைத்து நேர்வழியில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

அமரர் என்.எம்.பெரேரா தலைமையில் கட்சி உருவாக்கப்பட்ட பிறகு இந்த நாட்டில் ஆட்சி செய்த பிரிட்டிஷாருக்கு எதிராக சுதந்திரம் வேண்டி போராட்டத்தை முன்னெடுத்த போது அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ல.ச.ச.கட்சியை தடை செய்து அக்கட்சியின் பிரதானிகளை சிறையில் அடைத்தனர். சிறையில் அடைக்கப்பட்டவர்கள் அங்கிருந்து தப்பி இந்தியாவுக்குச் சென்று நேரு, என்.எம் பிலிப் போன்றோருடன் இணைந்து போராடினார்கள்.

எமது நாட்டின் தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் கொடுத்து போராடியதன் விளைவாக தோட்டத் தொழிலாளர்களுக்கு 8 மணித்தியால வேலையும் ஊழியர் சேமலாப நிதி போன்ற சலுகைளும் கிடைத்தன.

1956 ஆம் ஆண்டு இந்த நாட்டின் சிங்கள மொழியே அரசகரும மொழியாகக் கொண்டுவரப்பட்ட போது அதற்கெதிராக அன்று பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தவர் என்.எம்.பெரேரா ஆவார். சிங்கள மொழிக்கு எவ்வாறான உரிமை இருக்கின்றதோ தமிழ்மொழிக்கும் அவ்வாறான முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். லங்கா சமசமாஜ கட்சி இனவாதத்தை என்றும் எதிர்த்து வந்தது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று ல.ச.ச. கட்சி அரசுகளுக்கு பல முறை கோரி வந்த போதிலும், அரசுகள் அதற்கு செவிசாய்க்கவில்லை இந்த நாட்டில் தமிழ் மக்களை ஒதுக்கிவிட்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதால் நாட்டில் நிரந்தர சமாதானத்தை எதிர்பார்க்க முடியாது. நாட்டில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் போது தமிழ் மக்களையும் அரவணைத்து செயற்பட்டால்தான் நாட்டில் அபிவிருத்தி ஏற்படும்.

தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். அதிகமாக தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் அரச

அதிகாரிகளாக தமிழ் மக்களை நியமிக்க வேண்டும். அப்போதுதான் எமது நாட்டில் தமிழ், சிங்கள மக்களுக்கிடையில் இனஐக்கியத்தை ஏற்படுத்த முடியும். தற்போதைய லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரணவின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

அவரது கருத்தை தமிழ் மக்கள் பலப்படுத்துவதன் மூலம் அவரின் கனவை நனவாக்க முடியும்.

இனப்பிரச்சினையை தீர்ப்பதாகக் கூறி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை திசைதிருப்ப இடமளிக்க முடியாது. இதிலிருந்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதில் ல.ச.ச.கட்சி உறுதியாக உள்ளது. 13 ஆவது திருத்தத்தை பயன்படுத்தி இனப்பிரச்சினையை தீர்க்க கட்சியின் 88 ஆவது ஆண்டு நிறைவில் பிரார்த்தனை செய்கிறேன்.

எஸ். நித்தியானந்தன்

அறிவியல் துறையில் இந்தியா அபாரவளர்ச்சி

விஞ்ஞான ஆய்விதழ்களை வெளியிடுவதில் உலகளவில் மூன்றாமிடம்

அறிவியல் (விஞ்ஞானம்) ஆய்விதழ்களை வெளியிடுவதில் உலக அளவில் இந்தியா மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இந்திய மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறைஅமைச்சர் ஜிதேந்திர சிங் இது குறித்து பெருமிதம் தெரிவித்துள்ளார். இந்தியாவில் அறிவியல் ஆய்வுகள் கடந்த காலங்களை விட தற்போது அதிகரித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் 'அறிவியல் மற்றும் பொறியியல் குறிகாட்டிகள் 2022' எனும் அறிக்கையை சுட்டிக்காட்டி இத்தகவல்களை அமைச்சர் கூறியுள்ளார். இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில் கடந்த பத்தாண்டுகளில் அறிவியல் ஆய்விதழ்கள் அதிகம் வெளியிடுவது, புதிய ஆய்வுகளை மேற்கொள்வது போன்ற பணிகளை இந்தியா சிறப்பாக செய்து வருகிறது.

"கடந்த 2010 ஆம் ஆண்டு இந்தியா இந்த விடயத்தில் 7 ஆவது இடத்தில் இருந்தது. தற்போது இந்தியா மூன்றாவது இடத்திற்கு முன்னேறி இருக்கிறது. அதாவது 2010 ஆம் ஆண்டு 60,555 அறிவியல் ஆய்வுத்தாள்கள் வெளியாகின.

ஆனால் 2020 இல் சுமார் 1.50 இலட்சம் ஆய்வுத்தாள்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோல அறிவியல் மற்றும் பொறியியலில் கலாநிதி பட்டம் பெறும் உலக நாடுகள் வரிசையில் இந்தியா மூன்றாவது இடத்தில் இருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியா அதிக அளவில் காப்புரிமையை வழங்கியுள்ளது. நாட்டில் விஞ்ஞானிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது" என்றார் அமைச்சர் ஜிதேந்திர சிங்.

அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் திறனில் இந்தியாவின் செயல்திறன் கடந்த ஆண்டுகளில் சிறப்பாக மேம்பட்டிருப்பதை தகவல்கள் உறுதி செய்துள்ளன. இது இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பங்களிக்கும்" என்று அமைச்சர் கூறியுள்ளார்.

வரோதயநகர், புதுக்குடியிருப்பு மக்களின் கனவு நிறைவேறியது!

இனமத பேதமின்றி சேவையாற்றும் 'இலங்கை காப்போம்' நிறுவனத்துக்கு மக்கள் புகழாரம்!

கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அபிவிருத்தி மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் தேவைகளையறிந்து பல்வேறுபட்ட உதவிகளை 'இலங்கை காப்போம்' நிறுவனம் செய்து வருகின்றது.

அதற்கமைவாக, திருகோணமலை வரோதயநகர், புதுக்குடியிருப்பு கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற குடும்பங்களில் 25 குடும்பங்கள் பாலம் இன்றி பல கஷ்டங்களை எதிர்நோக்கி வந்துள்ளன. இவ்விடயம் 'இலங்கை காப்போம்' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரனின் (திலீப்) கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து உப்புவெளி பிரதேச சபையும், 'இலங்கை காப்போம்' நிறுவனமும் இணைந்து நிர்மாணித்த பாலம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டு பொது மக்களின் பாவனைக்கும் கையளித்து வைக்கப்பட்டது.

இலங்கை காப்போம் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் ஜே.ஆர்.பிரவினா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு உப்புவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஆர்.எ.எஸ்.ரீ.ரத்நாயக்க மற்றும் 'இலங்கை காப்போம்' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த பாலத்தை திறந்து வைத்து பொதுமக்களின் பாவனைக்கு கையளித்தனர். அதேவேளை அக்குடும்பங்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகளையும் வழங்கி வைத்தனர்.

"கடந்த 10 வருங்களாக பாலம் ஒன்று இல்லாமல் இங்குள்ள 25 குடும்பங்களும், பாடசாலைக்குச் செல்லும் எங்களது பிள்ளைகளும் பல கஷ்டங்களை அன்றாடம் எதிர்கொண்டு வந்தோம். குறிப்பாக, மழைக்காலங்களில் சொல்ல முடியாதளவு பாரிய சிரமங்களை அன்றாடம் எதிர்கொண்டு வந்துள்ளோம்" என்று அங்கு வாழ்கின்ற குடும்பங்கள் தெரிவித்தன.

"நாங்கள் அன்றாடம் கூலித்தொழில் செய்து எங்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றோம். ஒழுங்கான வீடுகளும் இல்லாத நிலைமையில்தான் வாழ்ந்து வருகின்றோம். எங்களின் நிலைமையை 'இலங்கை காப்போம்' நிறுவனத்திடம் எடுத்துச் சொன்னபோது, அதற்கான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக எடுத்து இப்பாலத்தை நிர்மாணித்து இன்று எங்களின் பாவனைக்கு கையளித்து வைத்துள்ளனர். இப்பாலத்தை நிர்மாணித்துத் தர உதவி புரிந்த அனைத்து உங்களுக்கும் எங்களின் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்" என்றும் அம்மக்கள் தெரிவித்தனர்.

இலங்கை காப்போம் நிறுவனம் இனமத மொழி வேறுபாடுகளுக்கப்பால் மக்களின் தேவைகளையறிந்து இயன்றளவு உதவிகளை உடனடியாக வழங்கி வருகின்றதொரு நிறுவனமாக உள்ளது.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னரான காலங்களில் அந்நிறுவனம் இத்தகைய உதவிகளைச் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அங்கு நடைபெற்ற நிகழ்வில் உப்புவெளி பிரதேச சபை உறுப்பினர்களான எஸ்.விபுசன், வி.பாபுகாந்த், கிராம சேவகர் எம்.பிரசாந்தினி, உப்புவெளி பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் 'இலங்கை காப்போம்' நிறுவனத்தின் செயலாளர், பொருளாளர், நிருவாக சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இர்ஷாத் இமாமுதீன்
(கிண்ணியா தினகரன் நிருபர்)

விவசாயிகளுக்கு தேவையான உரம் கொள்வனவுக்காக வங்கிக் கணக்குகளில் பணம் வைப்பிலிட அரசு முடிவு

ஹம்பாந்தோட்டை அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் அமைச்சர் அமரவீர

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு உரத்தினை கொள்வனவு செய்வதற்கு அவர்களது வங்கிக் கணக்குகளில் பணத்தினை வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட விவசாய அபிவிருத்தி தொடர்பான கூட்டம் ருஹுனு நிர்வாகக் கட்டிடத் தொகுதியில் இடம்பெற்றபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது ஹம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் சமல் ராஜபக்ஷ உட்பட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், பெரும் போகத்தின் போது விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள உர விநியோகத்திலிருந்து நீங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரசாங்க உர விநியோகத் திட்டத்தின் கீழ் கடந்த சிறுபோகத்தின் போது நாடு பூராவும் யூரியா உரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இதன்போது போக்குவரத்து, எரிபொருள், கப்பல் மற்றும் துறைமுக செலவு ஆகிய வற்றிற்காக 150 கோடி ரூபாவிற்கு மேல் பாரியதொரு தொகை செலவிடப்பட்டு வருகின்றது.

2022/2023 பெரும் போகத்தில் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு தேவையான சகலவகை உரத்தினை விநியோகம் செய்வதற்காக 6500 மில்லியன் ரூபாவிற்கும் கூடுதலான தொகை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எவ்வளவு சாதாரண முறையில் உர விநியோகத்தினை மேற்கொண்டாலும் அதனை விமர்சிப்போரின் தொகை கூடுதலாகவே உள்ளது.

விவசாய நிலங்களுக்குத் தேவையான யூரியா உரம் உட்பட சகல வகையான உர விநியோகத்தினையும் தனியார்த் துறையினூடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரத்தினை கொள்வனவு செய்வதற்கான பணத்தினை அரசாங்கம் விவசாயிகளுக்கு வழங்கும். இதனூடாக ஒரு ஹெக்டெயாருக்கு ஐம்பதாயிரம் ரூபாவிற்கு மேல் தொகையினை விவசாயிகளுக்கு வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

திகதி 18.12.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4973
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,849,160.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 4 7 2 4 4 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,054,148.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 282
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,249,020.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 20 22 37 56 விசேட இலக்கினம் சிம்மம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,590,111.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1428
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,725,080.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 4 8 4 5 4 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,182,137.20

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3215
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,078,780.00
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 33 54 57 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,884,547.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 1003
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,279,920.00
T 02 23 34 81
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 138,148,028.80

மேல 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1321
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,027,080.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 287,199,674.00
ஆங்கில எழுத்து S சுப்பர் நம்பர் 09 வெற்றி எண்கள் 10 27 38 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ජාතික ලොටරි මණ்டலய தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதல்கே மாவத, கொழும்பு 01

நகரசபை உறுப்பினர் சியாம் நடவடிக்கை

பேருவளை அல்ஹுமைஸரா முன்பாக பாதசாரிகள் கடவை

பேருவளை சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலைக்கு முன்னாலுள்ள பிரதான வீதிக்கு பாதசாரி கடவை அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில், அபிவிருத்திச் சங்க உறுப்பினரும் பேருவளை நகர சபை (மு.கா) உறுப்பினருமான சியாம் முனவ்வரின் சொந்த நிதியிலிருந்து இக்கடவை அமைக்கப்பட்டுள்ளதாக பழைய மாணவர் சங்க செயலாளர் அரூஸ் அனஸ் தெரிவித்தார்.

பாடசாலை நடைபெறும் நேரத்தில் அல்ஹுமைஸரா மற்றும் நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி மாணவ, மாணவிகள் இவ்வீதியை பயன்படுத்தியே பாடசாலைக்கு செல்கின்றனர். இவ்வீதியில் பாடசாலை நேரத்தில் அதிக சனநெரிசலும் வாகன நெரிசலும் காணப்படுகின்றன. இதனால் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர். இதனை கருத்தில் கொண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் இணைந்து விடுத்த வேண்டுகோளில் மேற்படி உதவியை செய்து தந்த பாடசாலையின் பழைய மாணவரான சியாம் முனவ்வருக்கு பாடசாலை சார்பாக அதிபர் ஏ.ஆர்.எம். ரிஸ்கி நன்றி தெரிவித்துள்ளார்.

புத்தளம் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க வேண்டுகோளையடுத்து 1.1 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களை சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் (ஐ.எம்.எச்.ஓ) அன்பளிப்புச் செய்தது. அவற்றை வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் சுமித் அத்தநாயக்க தலைமையிலான உத்தியோகத்தர்களிடம் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எச்.எம். ஷபீகின் பங்குபற்றுதலுடன் சமூக ஆர்வலரும், ஆசிரியருமான எஸ்.ஆர்.எம்.முஹுஸி கையளிப்பதை படத்தில் காணலாம். (படம்: புத்தளம் தினகரன் நிருபர்)

வெலிகம, கல்பொக்கை பதிவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வெலிகம தினகரன் நிருபர்

வெலிகம கல்பொக்க பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. மாத்தறை மாவட்ட பதிவாளர் திணைக்களத்தினாலேயே வெற்றிடமாகியுள்ள இப்பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. தகுதியானவர்கள் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

கல்பொக்கை பகுதியில் சுமார் 10 வருட காலமாக வெற்றிடமாகியுள்ள இப்பதவிக்கு தற்போது விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் பல தடவைகள் விண்ணப்பம் கோரப்பட்டும் எவரும் விண்ணப்பிக்காததால் அப் பதவி தொடர்ந்து வெற்றிடமாகவே உள்ளது.

NATIONAL CHAMBER OF EXPORTERS OF SRI LANKA
Voice of the Exporter

அலுவலக மாற்றம் பற்றிய அறிவித்தல்

22 டிசம்பர் 2022 முதல் ஸ்ரீலங்கா தேசிய ஏற்றுமதியாளர் சங்கம் புதிய அலுவலகக் கட்டிடத்திற்கு மாற்றப்படும்.

எங்கள் புதிய முகவரி:

இல.131/6,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08.

(கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் பள்ளிக்கும் (British School in Colombo)எல்விட்டிகல மாவத்தையில் உள்ள டிரில்லியம் ரெசிடென்சிக்கும் (Trillium Residencies) நடுவில்)

மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் உட்பட எங்கள் தொடர்பு விவரங்கள் மாறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் விவரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்:
தொலைபேசி எண்:011 432 8046 / மின்னஞ்சல் முகவரி : nce@nce.lk

தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

24 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவு

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு 24 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதாவது கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நேற்று வரையான காலப்பகுதியில் 24 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் 9 பொலிஸ் நிலையங்களிலும் பதிவாகியுள்ளன. இதில் 16 வயதுக்கு குறைவான 14 சிறுமியர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. ஒரு குழந்தை கொலை முயற்சிக்கு உட்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. 07 சிறுவர்கள் அடித்து காயப்படுத்தப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதேபோன்று 07 சிறுவர்கள் மீது பாலியல் சேட்டைகள் புரியப்பட்டதாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. ஒரு பாடசாலை மாணவன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டு சிறையில் இருப்பதாக தெரியவருகின்றது.

இதேவேளை மாணவர்கள் மத்தியில் வீதி விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வுகள் போதைப்பொருள் தடுப்பு மற்றும் சிறு குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் இந்த ஆண்டில் 215 வைரயான விழிப்புணர்வு செயலமர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் டெங்கு பரவுவதால் விழிப்புடன் செயற்பட அறிவுறுத்தல்!

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் 7 பேருக்கு டெங்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் மீண்டும் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் வவுனியா மாவட்டத்திலும் 7 பேர் டெங்கு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில், வவுனியா கந்தசாமி கோவில் வீதி மற்றும் நகர உள்வட்ட வீதி என்பவற்றில் வசிக்கும் இருவருக்கு டெங்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு குறித்த பகுதியிலேயே தொற்று ஏற்பட்டுள்ளமை ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தவிர, உக்குளாங்குளம் பகுதியில் இருவருக்கும், நொச்சிமோட்டை பகுதியில் ஒருவருக்கும், கணேசபுரம் பகுதியில் ஒருவருக்கும், மறவன்குளம் பகுதியில் ஒருவருக்கும் என மேலும் 5 பேருக்கு தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு டெங்கு தொற்று எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தற்போது அவ்வப்போது மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்புளின் பெருக்கம் அதிகரித்து டெங்கு தொற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே அனைவரும் சமூகப் பொறுப்புடன் தமது வாழிடங்களையும், அயல் பகுதியையும் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு தொற்றில் இருந்து பாதுகாப்பு பெற முடியும் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

தங்கூசி வலைகளால் அழியும் உயிரினங்கள்!

பரந்தன் குறூப் நிருபர்

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழான நன்னீர் மீன்பிடியில் தங்கூசி வலைகளை பயன்படுத்தி வருவதனால் நீர்வாழ் உயிரினங்கள் அழியும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற வவுனிக்குளத்தின் கீழ் 120க்கும் மேற்பட்ட நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் கூடுதலான மீனவர்கள் தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியை மேற்கொண்டு வருவதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது குறித்த குளத்தின் கீழ் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்துவதன் காரணமாக நீர்வாழ் உயிரினங்கள் அழிவடைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இந்த விடயத்தில் துறை சார்ந்த அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை இடைவிலகல்கள் அதிகரிப்பு

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் மாணவர் இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பிரதேசங்களில் ஒன்றாக காணப்படுகின்ற சாந்தபுரம் பகுதியில் சுமார் 55ற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களின் வரவு குறைவடைந்துள்ள அதேநேரம், இடைவிலகல்களும் அதிகரித்துள்ளதாக கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இப்பிரதேசத்தில் பல்வேறுபட்ட விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பெற்றோர்கள் மத்தியிலும் சமூகத்திலும் விழிப்புணர்வுகள் இன்மை காரணமாகவே இடைவிலகல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

பருத்தித்துறை நகரசபை தலைவர் இராஜினாமா

கரவெட்டி தினகரன் நிருபர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரத்துக்குட்பட்ட பருத்தித்துறை நகரசபையின் தலைவர் யோ. இருதயராஜா தனது பதவியை நேற்று காலை இராஜினாமா செய்துள்ளார்.

பருத்தித்துறை நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவுத் திட்டம் நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதங்கள் இடம்பெறவிருந்தன. அதற்காகச் சபை காலை 9:30 மணிக்குக் கூடவிருந்தது.

இந்நிலையில், காலை 9:20 மணிக்கு வருகை தந்த நகரசபைத் தலைவர் யோ. இருதயராஜா, சபை செயலாளரிடம் தனது இராஜினாமா கடிதத்தைக் கையளித்து விட்டு வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து 9:35 மணியளவில் சபையைக் கூட்டிய பருத்தித்துறை நகரசபை செயலாளர், தலைவர் பதவி விலகியதை சபைக்கு அறிவித்ததுடன் அவர் பதவி விலகியது தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரித்து புதிய தவிசாளர் தெரிவாகும் வரை சபை நடவடிக்கை இடம்பெறாது எனவும் தெரிவித்தார்.

திருத்திய வரவு செலவுத் திட்டத்தை ஆளும் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட சபையில் அங்கம் வகிக்கும் கட்சி உறுப்பினர்கள் பலர் ஒன்று சேர்ந்து மீண்டும் தோற்கடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்ததாகவும் அதனால் தான் சபை அமர்வுக்கு முன்னரே தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளதாகவும் முன்னாள் நகரசபையின் தலைவர் இருதயராஜா அறிவித்துள்ளார்.

15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த 5ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 6 பேர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவர் என 8 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்துத் தோற்கடித்திருந்தனர்.

அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 4 பேர், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவர், சுயேட்சைக் குழு உறுப்பினர் ஒருவர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவர் என 7 பேர் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று திருத்தங்களுடன் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு செலவுத்திட்டத்தையும் சபை உறுப்பினர்கள் பலர் தோற்கடிக்கத்திட்டமிட்டுள்ளதாக வெளியான தகவலையடுத்து நகர சபைத்தலைவர் தனது பதவியில் இருந்து விலகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

மர்மமான முறையில் பத்து மாடுகள் பலி

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, பூம்புகார் கிராமத்திலுள்ள விவசாய நிலத்தில் நேற்றுமுன்தினம் மாலை மர்மமான முறையில் 10ற்கு மேற்பட்ட மாடுகள் இறந்துள்ளன.

இக்கிராமத்திலுள்ள விவசாய நிலத்தில் பிரதேசவாசிகளின் மாடுகள் சில உட்புகுந்து அங்குள்ள உழுந்து மற்றும் நெற்பயிர் நிலங்களில் மேய்ச்சலில் ஈடுபட்டுள்ளன. இதன்போதே யூரியா மற்றும் பூச்சிக்கொள்ளி மருந்துகள் மாடுகளில் உடல்களில் கலந்திருக்க வாய்ப்புகள் காணப்படுவதாக கிராம கமக்கார அமைப்பினர் மற்றும் மாட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதனைவிட அப்பகுதிக்கு சென்று வந்த ஏனைய மாடுகளும் தற்போது நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் மாட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம், தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார், ஞாயிற்றுக்கிழமை மாலை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கிழக்கின் குரல்

தேசிய பாதுகாப்பு வாரம்; அம்பாறையின் பிரதான நிகழ்வு பெரியநீலாவணையில்!

ஒலுவில் விசேட நிருபர்

18ஆவது தேசிய பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தின் பிரதான நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி பெரியநீலாவணை பிரதேசத்தில் நடைபெறவுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ் தெரிவித்தார்.

இதனை முன்னிட்டு பல்வேறு சமய நிகழ்வுகளுக்கும் நினைவேந்தல் வைபவங்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில்

பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை ஆகிய பிரதேசங்களிலுள்ள கோவில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், விகாரைகளில் விசேட வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பாண்டிருப்பு, காரைதீவு, கல்முனை, திருக்கோவில் ஆகிய பிரதேசங்களில் கடல் கோள் அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்த நினைவுத்தூபிகளில் உறவினர்கள் சுடர் ஏற்றி நினைவுகூரவுள்ளனர்.

அத்துடன் பொத்துவில், திருக்கோவில், கோமாரி, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை பிரதேசங்களிலுள்ள அனர்த்த முன்னெச்சரிக்கைக் கோபுரங்களில் அனர்த்த பாதுகாப்பு ஒத்திகையும் இடம்பெறவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரங்களை ஒரே நேரத்தில் இயங்கச் செய்து அதன் மூலம் அனர்த்த முன்னெச்சரிக்கை ஒத்திகையை மேற்கொண்டு, பொதுமக்களை விழிப்பூட்டுவதற்கான வேலைத்திட்டத்தை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு முன்னெடுத்துள்ளது.

பாடசாலைகளிலும் அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்வு கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பாண்டிருப்பில் 100 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்பு

காரைதீவு குறூப் நிருபர்

பாண்டிருப்பு பிரதேசத்தில் 100 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் நேற்று முன்தினம் (18) வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனை பாண்டிருப்பு பல்தேவை கட்டடத்தில் வைத்தே அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இதன்போது தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைத்தனர்.

வடகிழக்கு மறுவாழ்வு அமைப்பின் சார்பில் வாழ்வாதார உதவித் திட்டங்களும் மாணவர்களுக்கான கற்றல் உபரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மின்சாரம் தாக்கியதில் இரு மாடுகள் உயிரிழப்பு

வாழைச்சேனையின் நாவலடிப் பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி இரு மாடுகள் நேற்று (19) உயிரிழந்துள்ளன.

நாவலடி, இன்ஷானியா வீதியில் தக்வாப் பள்ளிவாசலுக்கு அருகில் காணப்பட்ட மரமொன்று, பிரதான மின்கம்பியின் மீது முறிந்து விழுந்ததில் மின்கம்பி அறுந்துள்ளது. இந்நிலையில், அப்பகுதியில் மேய்ந்து திரிந்த மாடுகளில் இரு மாடுகள் மின்சாரம் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதாக, அப்பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

கிண்ணியாவில் 118 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

கிண்ணியா மத்திய நிருபர்

கிண்ணியா பிரதேசத்தில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 118 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.ரிஸ்வி தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் கடந்த வருடத்தில் 50 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்ததாகவும், அவர் தெரிவித்தார்.

கிண்ணியாவின் பெரியாற்றுமுனை பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புக்கான வேலைத்திட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் வருடத்தில் டெங்கு நோயை முழுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்கில் கிண்ணியா சுகாதார வைத்திய அலுவலகமும் பள்ளிவாசல்கள் சமாஜமும் இணைந்து டெங்கு நோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது. டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் பொலிஸார், சுகாதாரப் பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோரை உள்ளடக்கிய வகையில் 10 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் பூரணமான ஒத்துழைப்பும் அவசியமாவதாகவும், அவர் தெரிவித்தார்.

படுவான்கரையில் போதைப்பொருள் பாவனையைக் கண்டித்து ஊர்வலம்

மட்டக்களப்பு விசேட நிருபர்

'போதையை ஒழித்து, நல்ல பாதையை வகுத்து, மனித மாண்பைக் காப்போம்' எனும் தொனிப்பொருளில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலமும் துண்டுப்பிரசுர விநியோகமும் மட்டக்களப்பின் படுவான்கரைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்றது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட சர்வமத செயற்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நடவடிக்கையின் போது கொக்கட்டிச்சோலை வாராந்த சந்தை கூடுமிடம், பிரதான வீதிகள், அரச அலுவலகங்கள், வியாபார நிலையங்கள் ஆகிய இடங்களில் துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுவதுடன், அதனால் குற்றச்செயல்களும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீமைகள் அத்துண்டுப்பிரசுரங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

மட்டு. மெதடிஸ்த மத்திய கல்லூரியில் புத்தாக்க ஆய்வுகூடம் திறந்துவைப்பு

வெல்லாவெளி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் புத்தாக்க ஆய்வுகூடமொன்று, அக்கல்லூரியின் அதிபரும் புத்தாக்கக் குழுத் தலைவருமான இராசதுரை பாஸ்கர் தலைமையில் நேற்று (19) திறந்து வைக்கப்பட்டது.

இக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களின் ஆக்கத் திறன்களையும் கண்டுபிடிப்புகளையும் மேம்படுத்தும் நோக்கில் இவ்வாய்வுகூடம் திறந்து வைக்கப்பட்டதுடன், மாணவர்களினால் உருவாக்கப்பட்ட பல புத்தாக்கங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

எதிர்காலத்தில் மாணவர்கள் புத்தாக்கங்களில் ஈடுபட்டு, மாகாண மற்றும் தேசிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுவதற்கு வழிவகுக்கும் வகையிலேயே இவ்வாய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்படாத பாதையால் போக்குவரத்துக்கு கடும் சிரமம்

அடிப்படை வசதிகளின்றி வாழும் 200 குடும்பங்கள்

ஹட்டன் விசேட நிருபர்



ஹட்டன் நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டின்சின் நகரத்தில் இருந்து சிங்கார வத்தை தோட்டத்தின் ஊடாக ரொக்பில் தோட்டத்திற்கு செல்லும் ஆறு கிலோ மீட்டர் தூரம் கொண்ட பிரதான வீதி பல வருடங்களாக புனரமைப்பின்றி குண்டும் குழியுமாக இருப்பதால் தாம் போக்குவரத்து செய்ய கடும் சிரமப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாதை சீர்கேட்டினால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் குழந்தையொன்று இறந்த துர்ப்பாக்கிய சம்பவமும் இடம்பெற்றுள்ளதாக இத்தோட்ட பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

வாகனங்கள் செல்ல முடியாததால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வாகன வசதிகள் இல்லாத காரணத்தினால் இங்கு வாழும் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். மழைக்காலங்களில் இப்பாதையில் நடந்து கூட செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

இத்தோட்டத்தில் 200 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தாலும் இம்மக்கள் பல்வேறு அடிப்படை வசதிகள் இன்றியே வாழந்து வருகின்றனர். இம் மக்களுக்கென்று சுத்தமான குடிநீர், குடியிருப்பு வசதிகள் கிடையாது, விளையாட்டு மைதானம் போன்ற அடிப்படை வசதிகள் இன்றி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் இப்பகுதியில் மண் சரிவு அபாயமும் காணப்படுகின்றது.

ஏற்கனவே 50க்கும் மேற்பட்டவர்கள் தற்காலிக கூடாரங்களில் வசித்து வருகின்றனர்.

தேர்தல் காலத்தில் மாத்திரம் அரசியல்வாதிகள் தங்களுடைய வாகனங்களில் பவனியாக வந்து வாக்குகளை பெற்றுக்கொண்டு செல்வதாகவும் அதன் பின் எவரும் தாம் எதிர்நோக்கும். பிரச்சனைகளுக்கு தீர்வை பெற்றுத்தர முன் வருவதில்லையென இங்குள்ள மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே தமது பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பேராதனையில் விரிவுரையாளர்களின் பணிபகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரையாளர்கள் மேற்கொண்ட பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட் கிழமை (19) முதல் தாம் மேற்கொண்ட தொழிற் சங்க போராட்டத்தை இடை நிறுத்துவதாக அறிவித்துள்ளனர். எனவே திங்கள் முதல் வழமை போன்று விரிவுரைகள் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது. பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அத்துல சேனாரத்ன கடந்த வாரம் தாக்கப்பட்டமை தொடர்பாகவே நீதி விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளைக் கோரியும், தமது பாதுகாப்பை உறுதிசெய்யுமாறும், நடந்த சம்பவத்திற்கு எதிர்பைத்தெரிவித்தும் கலைப்பீட விரிவுரையாளர் சங்கம் மேற்படி பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஒரு வார காலத்திற்கு மேற்கொண்டது. அதன்படி கடந்த 13ம் திகதி முதல் பரீட்சை பணிகள் உட்பட சகல விரிவுரை நடவடிக்கைகளிலும் இருந்து ஒதுங்கி இருந்தனர். அதே நேரம் பேராசிரியர் அத்துல சேனாரத்ன தாக்குதல் தொடர்பாக இது வரை 12 மாணவர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏலம் அழைப்பு

அம்பகமுவ பிரதேச சபை

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்கு 02 நகல்களில் சீல் வைக்கப்பட்டு அனுப்பப்படும் கேள்வி விண்ணப்பங்கள் 20.12.2022 ஆம் திகதி முதல் 05.01.2023 ஆம் திகதி வரை மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

01. 2016/03 சுற்று ஆவணத்திற்கு உட்பட்டு உப அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அம்பகமுவ பிரதேச சபைக்கு உட்பட்ட வட்டவளை நகரில் அமைந்துள்ள கடைகளை குத்தகைக்கு விடுதல்.

02,03 உப அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அம்பகமுவ பிரதேச சபைக்கு சொந்தமான வருடாந்த டெண்டர் செய்யப்பட்ட சொத்துக்களை 01.01.2023 முதல் 31.12.2023 வரை ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுதல்.

மேற்கூறிய எண்கள் 01, 02, 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரிச் சொத்தைப் பெறுவதற்கான அவர்களின் அடையாளத்தை உறுதிசெய்த பிறகு, கேள்வி படிவக் கட்டணம், திரும்பப்பெறக்கூடிய பாதுகாப்பு வைப்புத்தொகை, திரும்பப்பெற முடியாத பாதுகாப்பு வைப்புத்தொகைக் கட்டணம் ஆகியவற்றை பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, செலுத்திய பிறகு கேள்வி படிவங்கள் மற்றும் தொடர்புடைய நிபந்தனை பத்திரிகையை 20.12.2022 அன்று மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அலுவலக நேரத்தில் அம்பகமுவ பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பம் ஏற்றுக் கொள்வது 05.01.2022 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறும். ஏலங்களை திறத்தல் 2023 ஜனவரி மாதம் 05 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு மேற்கொள்ளப்படும். கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபர் கலந்து கொள்ள வேண்டும். கேள்வி விண்ணப்பங்களை பதிவு தபால் மூலமாகவோ அல்லது அம்பகமுவ பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் வைப்பதன் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

கேள்வி விண்ணப்ப உறையின் இடது மூலையில் விண்ணப்பிக்க வேண்டிய சொத்தை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

ஏலத்தை ஏற்கவோ நிராகரிக்கவோ கொள்முதல் குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

01 உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பத்தை முன்வைக்கும் விண்ணப்பதாரரால் முன்வைக்கப்பட்ட கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், 06 மாத வாடகை வைப்புத்தொகையாக மற்றும் தொகையில் 50% அதே நாளில் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும்.

02,03 உப ஆவணங்களுக்கான வருடாந்த கேள்வி விண்ணப்பத்தை முன்வைக்கும் விண்ணப்பதாரரால் முன்வைக்கப்பட்ட கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், ஏல மதிப்பில் 50% அதே நாளில் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும்.

இந்த சொத்துக்கள் ஒவ்வொன்றையும் பெற்றுக் கொள்வதற்கு முன், சபையுடன் முறையான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை அம்பகமுவ பிரதேச சபையின் வருவாய் பிரிவில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

தொ. இலக்கம் - 051 -2242224
19.12.2022 ஆம் திகதி
அம்பகமுவ பிரதேச சபை.

தலைவர்,
கொள்முதல் குழு.

உப அட்டவணை இல. - 01

விபரம்	குறைந்தபட்ச ஏலம்	கேள்வி படிவக் கட்டணம்	திரும்பப் பெறக்கூடிய வைப்புத் தொகை	திரும்பப் பெற முடியாத வைப்புத்தொகை
வட்டவளை கடையறை இல : 01	ரூ.14 40000.00	ரூ.1000.00	ரூ.28800.00	ரூ.1500.00
வட்டவளை கடையறை இல : 02	ரூ.13 80000.00	ரூ.1000.00	ரூ.27600.00	ரூ.1500.00
வட்டவளை கடையறை இல : 03	ரூ.13 80000.00	ரூ.1000.00	ரூ.27600.00	ரூ.1500.00

உப அட்டவணை இல. 02

விபரம்	குறைந்தபட்ச ஏலம்	கேள்வி படிவக் கட்டணம்	திரும்பப்பெறக்கூடிய வைப்புத்தொகை	திரும்பப் பெற முடியாத வைப்புத் தொகை
கினிகத்தேனை நகரத்தின் கோழி இறைச்சிக் கடை	ரூ.798600.00	ரூ.1000.00	ரூ.15972.00	ரூ.1500.00

உப அட்டவணை இல. 03

விபரம்	குறைந்தபட்ச ஏலம்	கேள்வி படிவக் கட்டணம்	திரும்பப்பெறக்கூடிய வைப்புத்தொகை	திரும்பப் பெற முடியாத வைப்புத் தொகை
கினிகத்தேனை பொது மலசலகூடம்	ரூ.662475.00	ரூ.1000.00	ரூ.13249.50	ரூ.1500.00

சனாதிபதி அலுவலகம்

2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டில் சனாதிபதி அலுவலக வாகனங்களின் திருத்த வேலைகள் மற்றும் அவை சார்ந்த பின்வரும் தொகுதிகளின் கீழ் வழங்குநர்களின் பதிவு மேற்கொள்ளப்படும்.

✦ தொகுதி இலக்கம் மற்றும் விபரம்

1. வாகன என்ஜின் திருத்த வேலைகள் உட்பட ஏனைய எந்திரவியல் வேலைகள், டீசல் பம்பிகளின் திருத்த வேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் மற்றும் பட்டறை வேலைகள்
2. வாகனங்களின் வளிச்சீராக்கிகளைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
3. வாகன தகடு வேலைகள் மற்றும் வர்ணம் தீட்டுதல்
4. வானங்களின் குஷன் வேலைகள் மற்றும் அப்ஹொஸ்ட் வேலைகள்
5. வாகன சேர்விஸ்கள் மற்றும் உள்ளக சுத்திகரித்தல்
6. டயர் மற்றும் பெற்றிகளை வழங்கல்
7. கெசட் ரெகோடர்கள் மற்றும் ரிவஸ் கெமராக்களை நிறுவுதல், புதுப்பித்தல்கள்
8. மின்னியல் தொகுதிகள், வாகன பாதுகாப்புத் தொகுதிகள் உட்பட வாகன மின் தொழில்நுட்பம்

✦ விதிகள் மற்றும் நிபந்தனைகள்

➢ தேவையெனின், வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்காக அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளிற்காகப் பதிவு செய்து கொள்ளலாம்.

1. தொகுதி ஒன்றிற்காக மீளளிக்கப்படாத ரூ. 1,000/- இற்கான பதிவுக் கட்டணத்தை 2022.12.21 முதல் 2023.01.09 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை சனாதிபதி அலுவலக சிறாப்பரிடம் காசாகச் செலுத்துதல் வேண்டும். (காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)
2. மேலும், தேவையெனின் வழங்குநர்கள் பல தொகுதிகளிற்காகவும் பதிவு செய்து கொள்ளலாமென்பதுடன், ஒவ்வொரு தொகுதிக்குமாக ரூபா 1,000/- வீதம் மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அவற்றிற்காக தனித்தனியான பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
3. கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்து 2022.12.21 முதல் 2023.01.09 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மாதிரி விண்ணப்பப் படிவங்களை சனாதிபதி அலுவலக பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2023.01.10 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பிரதான கணக்காளர் (பெறுகை), சனாதிபதி அலுவலகம், காலிமுகத்திடல், கொழும்பு-01 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.
4. விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023 தொகுதி இலக்கம் ....."** எனக் குறிப்பிடுதல் வேண்டும். (தொகுதி இலக்கம் மேற்கண்டவாறு குறிப்பிடப்படல் வேண்டும்.)
5. வழங்கல் நிறுவனமானது, சனாதிபதி அலுவலகத்திலிருந்து 15 கி.மீற்றர் இற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
6. குறைந்த பட்சம் ஒரு மாத கால கடன் அடிப்படையில் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழங்குநர்கள் உடன்படுதல் வேண்டும்.
7. விண்ணப்பமொன்று ஒருறையில் உள்ளிட்டு அனுப்பப்படல் வேண்டும்.
8. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து பண்டங்கள், வழங்கல்கள் மற்றும் சேவைகளிற்காக விலைமனுக்கள் கோரப்படினும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களை கோரும் உரிமை மற்றும் முன்னறிவித்தல் இன்றி பதிவுக்கான எந்தவொரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமை சனாதிபதியின் செயலாளருக்கு உரித்தாகும்.

➢ மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இவ் அலுவலக தொலைபேசி இலக்கம் 0112354354 (3861) ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
அமைச்சின் பெறுகைக்குழு,
சனாதிபதி அலுவலகம்,
காலிமுகத்திடல்,
கொழும்பு-01.
2022.12.20

இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம் (SLSI)

பொதுமக்களின் கருத்துரைகளுக்கான இலங்கை தரநிர்ணய கட்டளைகளின் வரைவு மற்றும் திருத்தங்கள்

1) சேதன பசளை உற்பத்திக்கான சிறந்த தயாரித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டி - இலங்கை தரநிர்ணய கட்டளை வரைவு
(DSLS .....: .....)

2) பசளைகள் மற்றும் மண் நிலபரங்களை பரீட்சிக்கும் முறைமைகள்- இலங்கை தரநிர்ணய கட்டளை வரைவு
பாகம் 8 : **pH** இன் தீர்மானம்
(DSLS .....: .....)

3) பசளைகள் மற்றும் மண் நிலபரங்களை பரீட்சிக்கும் முறைமைகள்- இலங்கை தரநிர்ணய கட்டளை வரைவு
பாகம் 9 : மின்கடத்துதிறனின் தீர்மானம்
(DSLS .....: .....)

4) பசளைகள் மற்றும் மண் நிலபரங்களை பரீட்சிக்கும் முறைமைகள்- இலங்கை தரநிர்ணய கட்டளை வரைவு
பாகம் 10 : மொத்த சேதன கார்பனின் தீர்மானம்
(DSLS .....: .....)

5) காளான் உற்பத்தி மற்றும் பதனிடல் ஆகியவற்றின் சிறந்த விவசாய செய்முறைகளுக்கான தேவைப்படுத்தல்கள்
இலங்கை தரநிர்ணய கட்டளை வரைவு
(DSLS .....: .....)

6) தூண்டப்பட்ட பழம் பழுக்கவைக்கும் தேவைப்படுத்தல்கள்
இலங்கை தரநிர்ணய கட்டளை வரைவு
(DSLS .....: .....)

7) ஒரு தடவை பாவிக்கும் அல்ரா-மெலிதான/மெல்லிய சுகாதார துவாய்களுக்கான விபரக்குறிப்புக்கள்.
இலங்கை தரநிர்ணய கட்டளை வரைவு
(DSLS .....: .....)

8) பாதுகாப்பான தீக்குச்சிக்களுக்கான விபரக்குறிப்புக்கள்.
இலங்கை தரநிர்ணய கட்டளை வரைவு
(DSLS 11 :.....) மூன்றாம் மீள்பதிப்பு

9) **SLS** 275:2014 இற்கான 02 ஆம் இலக்க திருத்த வரைவு
இலங்கை தரநிர்ணய கட்டளை பற்பசைக்கான விபரக்குறிப்பு
(மூன்றாம் மீள்பதிப்பு)

10) **SLS1732**:2022 இற்கான 01 ஆம் இலக்க திருத்த வரைவு
இலங்கை தரநிர்ணய கட்டளை ஒரு தடவை பாவிக்கும் சுகாதார துவாய்களுக்கான விபரக்குறிப்பு

11) பிளாஸ்டிக் - அழிவுறக்கூடிய பிளாஸ்டிக் கைத்தொழில் கடைப் பொருட்களுக்கான பைகள்.
(DSLS .....:.....) ISO 5412:2022

மேலேயுள்ள வரைவு தரநிர்ணய கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்தும் ஏனைய ஆர்வமுள்ள குழுக்களிடமிருந்தும் கருத்துரைகளை இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம் அழைக்கின்றது.

இந்தவரைவு தரநிர்ணய கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் இறுதி வடிவம் பெறமுன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துரைகள் இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் உரித்தான குழுவினால் பரிசீலிக்கப்படும்.

மேலேயுள்ள தரநிர்ணய கட்டளைகள் மற்றும் திருத்தங்களின் பிரதிகளை (01 இலிருந்து 10 வரையுமானது) இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் விஞ்ஞானரீதியிலான நியமமாக்கல் பிரிவிலிருந்து அல்லது ஆவணமாக்கல் மற்றும் தகவல் பிரிவிலிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் www.slsi.lk என்ற இணையத்திலிருந்தும் இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம். 11 ஆம் தரநிர்ண வரைவுக் கட்டளையானது இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நூலகத்திலிருந்து கொள்வனவு செய்யலாம்.

2023.02.20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கருத்துரைகள் என்னை வந்தடைதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம்
இல. 17,விக்டோரியா இடம்
எல்விட்டிகலமாவத்தை
கொழும்பு-08.
தொலைபேசி: 011-2671567 – 72
தொலைநகல்: 011-2671579
மின்னஞ்சல்: dg@slsi.lk
இணையம்: www.slsi.lk
முகநூல்: https://www.facebook.com/officialSLSI

இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம்
தொழில்நுட்பவியல் அமைச்சு

விலைமனுக்களுக்கான அழைப்பு

அப்பியாசக் கொப்பிகளைக் கொள்வனவு செய்தல்

தங்காலை பிரதேச சபைக்கு சுமார் 10000 எண்ணிக்கையான 80 பக்கங்கள் கொண்ட ஒற்றை ரூல் CR அப்பியாசக் கொப்பிகளைக் கொள்வனவு செய்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ''அப்பியாசக் கொப்பிகளுக்கான விலைமனுக்கள்'' எனக் கடித உறையின் மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2022-12-29ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

தலைவர்,
தங்காலை பிரதேச சபை,
நெடோல்பிட்டிய.
தொ.பே. 047-2240475

ஆர்ய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

வீரசுமன வீரசிங்ஹ ஆகிய நான், இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "ஆர்ய மன்றம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

1. தேசிய மற்றும் கிராமியத் தலைவர்களுக்கு பயிற்சியளித்தல்
2. மாணவர்களின் கல்வி, விளையாட்டு மற்றும் கலை அம்சங்களுக்கு ஆதரவளித்தல்
3. சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்களை செயற்படுத்தல்

மற்றும்

வீரசுமன வீரசிங்ஹ
பாராளுமன்ற உறுப்பினர்

விஷேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் கொட்டுகொட, மிலேனியம் சிட்டி, வலயம் III இல 292 என்ற முகவரியில் வசிக்கும் பலிஹவடன ஜயசூரிய கொடிகார அப்புஹாமிலாகே குசும்லதா அல்லது குசும் கோதொ.ஃப் ஆகிய நான், அர்சகுலசூரிய தனிப்பேருகே சமிந்த ஜட் பிரசங்ஸ குரேரா என்பவருக்கு வழங்கப்பட்டதும், 2018 ஜூலை 12ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டதும் கம்பஹா காணிப் பதிவகத்தில் இலக்கம் 74 புத்தக இலக்கம் 46, தினப் புத்தக இலக்கம் 2419 இன் கீழ் பதிவு செய்யப்பெற்றுள்ள விஷேட அற்றோணி தத்துவமானது, இன்று முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இன்று முதல் என்சார்பில் அவர் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைகள் தொடர்பிலும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

பலிஹவடன ஜயசூரிய கொடிகார அப்புஹாமிலாகே குசும்லதா அல்லது குசும் கோதொ.ஃப்

Repeat Your Ad For Better Offers

மட்டுப்படுத்தப்பட்ட பொத்துவில் பலநோக்கு கூட்டுறவு சங்க முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் கிளைக் குழுக்களை தெரிவு செய்யும் பொருட்டு வாக்களிக்க தகுதியுள்ள அங்கத்தவர் பட்டியலில் உள்ள கீழ்குறிப்பிடப்படும் குறைபாடுகளை சீர்செய்து காட்சிப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. எனவே சகல கிளைகளிலும் வாக்களிக்க தகுதியுள்ள சகல அங்கத்தவர்களும் 20.12.2022 தொடக்கம் 02.01.2023 ஆம் திகதி வரை வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை சங்க தலைமைக்காரியாலயத்திற்கு சமுகம் கொடுத்து தங்களது தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை பதிவுசெய்து கொள்ளுமாறும் மரணித்த அங்கத்தவர்கள் தொடர்பாக அவர்களுடைய உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களை சமர்ப்பித்து பதிவுசெய்து அவர்களை அங்கத்தவர் பட்டியலில் இருந்து நீக்கிக்கொள்ள ஒத்துழைப்பு வழங்குமாறும் வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.

இப்படிக்கு
இயக்குநர் சபை
மட்டுப்படுத்தப்பட்ட பொத்துவில் பலநோக்கு கூட்டுறவு சங்கம்
பொத்துவில்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

விலக்களித்தலுக்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) (திருத்தப்பட்ட) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இத்தால் அறியச்செய்வது யாதெனில், சக்தி விநியோக அளவுக் குறைவு மற்றும் அவற்றின் வளாகங்களுள் ஓர் எல்லைக்குட்பட்ட விநியோக வலையமைப்பு காணப்படுதல் ஆகியவற்றால், குறித்துரைக்கப்பட்ட/ முறையான வளாகங்களில் மட்டும் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் வழங்கல் ஆகிய நோக்கங்களிற்காக, ஆணைக்குழு கீழ்வரும் அடையாளங்காணப்பட்ட விண்ணப்பதாரருக்கு விலக்களிக்க உத்தேசித்து உள்ளது என்பதாகும்.

விண்ணப்ப இல	விண்ணப்பதாரர்	வளாகம்	நுகர்வோரின் இயல்பு
E/AE-D/22/17	அபிவிருத்தி கூட்டு ஆதன திட்டம் இல.1817 (பிரதம குடியிருப்புகள் 194)	இலக்கம் 194, ஹைலெவல் வீதி, நுகேகொட	குடியிருப்பு
E/AE-D/22/18	வாட்டர் பிரண்ட் புரப்பர்டீஸ் பிரைவேட் லிமிடெட் (சீனமன் லை.ஃப் இன்டிகிரேட்ட் ரிசார்ட்)	01, நீதியரசர் அக்பர் மாவத்தை, கொழும்பு 02	வணிகம்
E/AE-D/22/19	அர்பன் இன்வெஸ்மண்ட் என்ட் டிவலப்மன்ட் கம்பனி பிரைவேட் லிமிடெட்	செத்சிரிபாய II கட்டம், கீழ் மாடி, பத்தரமுல்ல	வணிகம்
E/AE-D/22/20	யூனியன் ரெசிடென்சீஸ் பிரைவேட் லிமிடெட் (ஹில்டன் கொழும்பு ரெசிடென்சீஸ்)	இல: 200, யூனியன் பிளேஸ், கொழும்பு 02	குடியிருப்பு
E/AE-D/22/21	அபிவிருத்தி கூட்டு ஆதன திட்டம் இல.4360 (616 பிரதான குடியிருப்புகள்)	இல: 616, ஈடபிள்யூ. பெரேரா அவெனியூ, எதுள்கோட்டே	குடியிருப்பு
E/AE-D/22/22	அபிவிருத்தி கூட்டு ஆதன திட்டம் இல: 4185 (306 பிரதான குடியிருப்புகள்)	இல. 306, ஹைலெவல் வீதி, கொழும்பு 06	குடியிருப்பு
E/AE-D/22/23	எலிகன்ட்16 அபார்ட்மெண்ட் மேனேஜ்மெண்ட் அபிவிருத்தி கூட்டு ஆதன திட்டம் இல. 3617	இல. 166/7, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05	குடியிருப்பு
E/AE-D/22/24	யூனியன் பிளேஸ் அபார்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (447 லூனா டவர்)	இல. 447, யூனியன் பிளேஸ், கொழும்பு 02	குடியிருப்பு

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்ப இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2022.12.20

விலைமனுக்களுக்கான அழைத்தல்

நுவரெலிய மாநகர சபை

நுவரெலியாவில் உத்தேசிக்கப்பட்டுள்ள மத்திய சந்தை கட்டிடம் - III ஆம் கட்டம்)

(தரைகீழ் மாடி, தரை மாடி ஆகியவற்றின் மீதி வேலை மற்றும் முதலாம் மாடியின் கழிவறைத் தொகுதி வேலை)

CONTRACT No.: CPC/NE/MC/WP2/2022/24)

1. கீழே விபரிக்கப்பட்டவாறு III ஆம் நிலையிலுள்ள நுவரெலியாவின் உத்தேசிக்கப்பட்ட சந்தைக் கட்ட நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து நுவரெலிய மாநகர சபை பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

தொ. இல.	ஒப்பந்த இல.	செயற்றிட்டப் பெயர்	பெசேவ மற்றும் இடை நிகழ்வுகள் அடங்கலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகு செலவு (மில். ரூபாவில்)	தேவைப்படும் ஆகக் குறைந்த CIDA பதிவு	ஒப்பந்தக் காலம் (நாட்களில்)	விலைமனுப் பிணை (ரூபாவில்)	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்)
01.	CPC/NE/MC/ W02/2022/24	உத்தேசிக்கப்பட்டுள்ள மத்திய சந்தை – III ஆம் நிலை	220 மில்லியன்	சி-3 மற்றும் சி-2	365	3,300,000	40,000

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருவனவற்றை அடக்கும்.

   ICTAD/CIDA பதிவு.

   (அ) கடந்த 5 வருடங்களில் விலைமனுதாரரானவர் நிகரான தன்மையிலமைந்த ஆகக் குறைந்தது இரு செயற்றிட்டங்களை பூர்த்தி செய்த அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு செயற்றிட்டத்தின் ஆகக் குறைந்த ஒப்பந்த பெறுமதியானது 200 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும். ஒவ்வொரு செயற்றிட்டத்தின் ஆகக் குறைந்தது 70% ஆவது ஒப்பந்த காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

   (ஆ) கடந்த ஐந்து வருடங்களில் நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது ஆகக் குறைந்தது 330 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

   (இ) விலைமனுக்கோரல் தரவின் 4.2 (எவ்) உட்கூறின் பிரகாரம், விலைமைனுக்கோரலை சமர்ப்பிக்கும் வேளையில் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவு நீங்கலாக ஆகக் குறைந்த செயற்பாட்டு மூலதனம், திரவச் சொத்துக்கள் அல்லது இருப்பு நிலையிலுள்ள கடன் வசதிகள் ஆகியன 55 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருத்தல் ஆகாது. கடன் வசதியின் உறுதிப்படுத்தும் கடிதமானது ஆணையாளர், மாநகர சபை, நுவரெலிய, உடபுசஸ்ஸ லாவ பழைய வீதி, நுவரெலிய என முகவரியிடப்படல் வேண்டும்.

   (ஈ) விலைமனுதாரரானவர் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடனான ஒப்பந்தத்திற்காக பதிவுச் சான்றிதழை விலைமனுதாரர் வழங்கல் வேண்டும். (இல.: 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10)

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் நுவரெலிய மாநகர சபை பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
6. 2022.12.20 ஆம் திகதியிலிருந்து 2023.01.09 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் நுவரெலிய மாநகர சபையின் நிதிப் பிரிவிலுள்ள சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 40,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், நுவரெலிய உடபுஸ்ஸலாவ பழைய வீதி, நுவரெலிய மாநகர சபையின் ஆணையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
7. விலைமனுவின் மூலப்பிரதியானது 2023.01.10 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் இப்பணியின் தலையங்கமானது குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக தகவலை 052-2222275 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக வேலைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
8. விலைமனுவின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (2023.04.11)
9. விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கமைவாக அனைத்து விலைமனுக்களும் முப்பத்து மூன்று இலட்சம் ரூபா பெறுமதியுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு (2023.05.09) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத விலைமனுப்பிணையுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும். விலைமனுப்பிணையானது ஆணையாளர், மாநகர சபை – நுவரெலிய, உடபுஸ்ஸல்லாவ பழைய வீதி, நுவரெலிய என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
10. 2023.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நுவரெலிய மாநகர சபையில் நடைபெறுவதற்கு ஆயத்தம் செய்யப்படும். அனைத்து விலைமனுதாரர்களும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு தீவிரமாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.
11. பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்களில் பொருத்தமான விலைமனுவொன்றை தெரிவு செய்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.
12. விலைமனுதாரரின் விலைமனுக்களானது தொழில்நுட்ப, நிதியிடல் மற்றும் ஏனைய தகைமைகள் நிறைவேற்றப்படாதவிடத்து அவைகள் நிராகரிக்கப்படும்.
13. விலைமனுக்கோரல் ஆவணங்களில் தேவைப்படுத்தப்பட்டவாறான தொழில்நுட்ப, நிதியிடல் மற்றும் ஏனைய தகைமைகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.
14. விலைமனு ஆவணத்திற்கான எந்தவொரு மாற்றமும் விலைமனுதாரரினால் கையொப்பமிடல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

ஆணையாளர்,
மாநகர சபை,
உடபுஸ்ஸல்லாவ பழைய வீதி,
நுவரெலிய.
தொலைபேசி இல.: 052-2222275

விலைமனுக்களுக்கான அழைப்பு

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு சமைக்காத/சமைத்த உணவுகளை வழங்கல் - 2023

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கும் பின்வரும் வைத்தியசாலைகளுக்கு சமைக்காத/சமைத்த உணவுகளை வழங்குவதற்காக, கிழக்கு மாகாணத்திலிருந்து தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

தொ. இல.	நிறுவனத்தின் பெயர்	மீளளிக்கும் வைப்புத் தொகை (ரூபா)	சொத்துச் சான்றிதழின் பெறுமதி
சமைக்காத உணவுகள்			
01	ஆதார வைத்தியசாலை, கிண்ணியா	35,000	100,000
02	ஆதார வைத்தியசாலை, மூதூர்	35,000	100,000
03	ஆதார வைத்தியசாலை, புல்மோட்டை	6,000	75,000
04	பிரதேச வைத்தியசாலை, சேருநுவர	6,000	75,000

அ. சமைக்காத விலைமனுக் கோரும் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் G 170 படிவத்தில் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்துச் சான்றிதழுக்கான தொகைக்காக, உரித்தான வைத்தியசாலை அமைந்திருக்குமிடத்து அல்லது ஒப்பந்தக்காரர் வசிக்குமிடத்து பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ். இச்சான்றிதழானது வழங்கப்படும் திகதியில் இருந்து 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

ஆ. விலைமனுக்கோரல் ஆவணங்களை பெறுவதற்காக உரிய நிறுவனத்தின் தலைப்புக்கடிதத்தில் கோரிப்பெறலாம்.

இ. வியாபார பதிவுச் சான்றிதழ்

சமைத்த உணவுகள்		மீளளிக்கும் வைப்புத் தொகை (ரூபா)	சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்
01	பிரதேச வைத்தியசாலை, கிளிவெட்டி	2,000.00	1. தனிப்பட்ட கம்பனிகளாயின் / விற்பனை நிலையமாயின் வியாபார சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பத்திரப் பிரதி சமர்ப்பித்தல் வேண்டும். (Business Registration Certificate). 2. சங்கங்களாயின் உரிய பிரதேச செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட சிபாரிசுக் கடிதத்தினை கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.
02	பிரதேச வைத்தியசாலை, கோமரங்கடவெல	2,000.00	
03	பிரதேச வைத்தியசாலை, நிலாவெளி	2,000.00	
04	பிரதேச வைத்தியசாலை, ஈச்சிலம்பத்து	2,000.00	
05	பிரதேச வைத்தியசாலை, பதவிசிறிபுர	2,000.00	
06	பிரதேச வைத்தியசாலை, சம்பூர்	2,000.00	
07	பிரதேச வைத்தியசாலை, மகாதிவுல்வெவ	2,000.00	
08	பிரதேச வைத்தியசாலை, தோப்பூர்	2,000.00	
09	பிரதேச வைத்தியசாலை, சேருவில	2,000.00	
10	பிரதேச வைத்தியசாலை, குச்சவெளி	2,000.00	
11	பிரதேச வைத்தியசாலை, தம்பலகமம்	2,000.00	

01. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் ஆவணங்களை கையேற்பதற்கு முன்னராக இலவசமாக 120, நீதிமன்ற வீதி, திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில்- அலுவலக. நேரங்களில் பரீட்சிக்கலாம்.
02. திருகோணமலை நீதிமன்ற வீதி, 120 ஆம் இலக்கத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவை திணைக்களத்தில் 20.12.2022 ஆம் திகதியிலிருந்து 09.01.2023 ஆம் திகதிவரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையும் தலா ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்தி விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
03. விலைமனுக்கள் 10.01.2023 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், 120, நீதிமன்ற வீதி, திருகோணமலை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் / உறையின் இடது பக்க மேல் மூலையில் உரித்தான வைத்தியசாலையின் பெயர் தனித்தனியாக குறிப்பிடப்படல் வேண்டும்.

    முடிவுத்திகதியன்று உடனடியாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் மாநாட்டு மண்டபத்தில் கூறுவிலைதாரர் அல்லது அவர்தம் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
04. மேலதிக விபரங்களை திருகோணமலை, நீதிமன்ற வீதி 120ஆம் இலக்கத்தில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலும் மற்றும் 026-2220103 என்ற தொலைபேசி எண்ணூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.
05. விலைமனுக்களை வழங்குவதற்கான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமை பெறுகைக்குழுவுக்கே உரியது.

தலைவர்
திணைக்களப் பெறுகைக் குழு
பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்
120, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.

அரசாங்க தொழில் பெற்று தருவதாக கூறி பண மோசடி

பதுளையில் ஒருவர் கைது

பதுளை தினகரன் விசேட நிருபர்

அரச துறையில் தொழில் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து, இளைஞர் யுவதிகளை ஏமாற்றி, தபால் அலுவலகம் ஊடாக செயற்படுத்தப்படும் பிளம்டி முறையில் நிதி மோசடி செய்த நபர் ஒருவர் பதுளையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தொடர்பில் பதுளை, மஹியங்கனை மற்றும் ஹாலிஎல பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் பதுளை பிரதேச குற்றப் புலனாய்வுப்பிரிவின் அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பண்டாரவளை பகுதியில் வசிக்கும் பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய சந்தேக நபர், கடந்த கொரோனா தொற்றின்போது, பதுளை பொது நூலகத்திற்கு வருகை தரும் நபர்களின் தகவல்களை பதிவு செய்ய வைத்திருந்த புத்தகத்தின் இரண்டு தாள்களை கிழித்து, அதில் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நடமாடும் சேவை

மாத்தளை மாவட்ட செயலக காரியாலயத்தின் ஏற்பாட்டில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் கடந்த 17ஆம் திகதி மாவட்ட செயலக காரியாலயத்தில் நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதன்போது சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வந்த விசேட தேவையுடையவர்கள் 200 பேர்களுக்காக விசேட பரீட்சை ஒன்றும் நடத்தப்பட்டது. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நிஷாந்த வீரசிங்க, மாவட்ட மேலதிக செயலாளர் மற்றும் திணைக்கள அதிகாரிகள் இந்நடமாடும் சேவையை நடாத்தினர்.

ஜனாதிபதியின் வேண்டுகோள் மகாநாயக்க தேரர்களிடம் முன்வைப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)

நாட்டுக்கு ஆசீர்வாதம் வேண்டி 75வது சுதந்திர தின கொண்டாட்டத்திற்காக புனித தந்தத்தை காட்சிக்கு வைக்குமாறு, அரசாங்கம் சார்பில் ஜனாதிபதியின் வேண்டுகோளை, மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவை ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர், அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்க தேரர் வரகாகொட ஞானரதன தேரர் ஆகியோர்களுடன் தியவதன நிலமே பிரதீப நிலங்க தேல பண்டார ஆகியோர்களுக்கு முன் வைக்கப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை (17) கண்டிக்கு விஜயம் செய்த பிரதமர் தினேஷ் குணவர்தன பீடாதிபதிகள் மற்றும் தியவதன ஆகியோரை சந்தித்த போது மேற்படி கோரிக்கையை முன் வைத்தார்.

மாத்தளை இரத்தொட்டை பிரதேசத்தில் உள்ள தோட்டப்புற பாடசாலைகளில் இருந்து இம்முறை தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் தோற்றவிருந்த மாணவர்களுக்கு ஆசிர்வாதம் வேண்டி நேற்று முன்தினம் தம்பளகால ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஏற்பாடு செய்த விசேட பூஜை வழிபாட்டில் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க கலந்து கொண்டபோது பிடிக்கப்பட்ட படம். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

மலையகமெங்கும் அதிக பனி மூட்டத்துடனான கன மழை

சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(ஊவா சுழற்சி நிருபர்)

மலையகமெங்கும் அதிக பனி மூட்டத்துடனான கன மழை பெய்து வருவதால் வாகனங்களை கவனமாக செலுத்துமாறு சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பனிமூட்டத்துடனான அதிக மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

குறிப்பாக பதுளை மாவட்டத்தின் பதுளை, பண்டாரவளை, பசறை, வெலிமடை, சில்மியாபுர, பொறகஸ், ரத்தம்ப, ஊவா பறணகம, மஹியங்கணை, எல்ல, நுவரெலியா, மற்றும் ஹற்றன் உள்ளிட்ட பல மலையகப் பகுதிகளில் என்றுமில்லாதவாறு இவ்வாறு பனிப் பொழிவுடன் கூடிய மழை பெய்கின்றது. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரமன்றி இதர தொழிலுக்கு செல்வோரும் வெகுவாக சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். சுமார் முப்பது வருடங்களுக்கு முன் இவ்வாறான பனி மூட்டமான கால நிலை நிலவியதாகவும் தற்போதைய இந்த காலநிலையால் கை, கால் விறைப்பு ஏற்படுவது மாத்திரமன்றி கை,கால், உதடு போன்றவற்றில் வெடிப்புக்கள் ஏற்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெலிமடை நுவரெலியா வீதியின் சில்மியாபுர, பொறகஸ், ஹக்கல பிரதேசம், பதுளை கண்டி வீதியில் ரந்தெனிய பிரதேசம் , எல்ல வெல்லவாய வீதியின் இராவண எல்ல போன்ற பிரதேச வீதிகளில் இவ்வாறு அதிக பனி மூட்டமும் மழையும் பெய்து வருவதால் வீதிகளில் மண் சரிவு, கற்பாறைகள் விழுதல் மற்றும் பாதை சறுக்கல் நிலை ஏற்பட அதிக வாய்ப்புண்டு.

எனவே இவ் வீதிகளில் பயணிக்கும் வாகன ஓட்டிகள் மிக அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சாமிமலை ஸ்டொக்ஹோம் தோட்டத்தில் தொழிலாளர்கள் பணிபகிஸ்கரிப்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

சாமிமலை பகுதியில் உள்ள ஹொரன பிளான்டேசனுக்கு உரித்தான ஸ்டொக்ஹோம் தோட்டத்தில் நேற்று காலை முதல் தொழிலாளர்கள் தோட்ட தேயிலை தொழிற்சாலை முன்பாக பணி பகிஸ்கரிப்பை மேற்கொண்டனர்.

இது குறித்து தோட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் தொழில் பிணக்குகள் சம்பந்தமாக ஹட்டன் தொழில் ஆணையாளர் நாயகம் முன்பாக நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது, முகாமையாளர் ஏற்றுக் கொண்ட நூத்தி பிரிவில் உள்ள வெளிக்கள உத்தியோகத்தரை இடமாற்றம் செய்வதாக இருந்தும் இன்று வரை அந்த தோட்ட நிர்வாகம் வெளிக்கள உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யாததை எதிர்த்து காலை முதல் தொடர் பணி பகிஸ்கரிப்பு மேற் கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

பலாங்கொடை நகர சந்தையில் அசுத்தமான நீரில் மரக்கறிகள் கழுவப்படுவதாக புகார்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை நகர சந்தையில் விற்பனை செய்யப்படும் அநேகமான மரக்கறிகள் நகரை அண்மித்து ஓடும் அசுத்தமான ஆற்று நீரைப் பயன்படுத்தி கழுவப்படுவதாக பலாங்கொடை நகர வாசிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

பலாங்கொடை நகர சபை எல்லைப் பிரதேசத்தில் வாராந்தம் நடைபெறும் வார இறுதிச்சந்தை மற்றும் தினச்சந்தை மட்டுமன்றி சில வியாபார நிலையங்களில் விற்கப்படும் மரக்கறி பழவகைகள், கீரை வகைகள் என்பன இவ்வாறு அசுத்தமான நீரில் கழுவப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பலாங்கொடை நகரை ஊடறுத்து ஓடும் தொரவல ஆற்று நீர் முறையாக வடிந்து செல்லும் கால்வாய் வசதியின்றி ஒரே இடத்தில் தேங்கி நிற்பதால் இந்நீர் அசுத்தமடைந்திருப்பதாக சுகாதாரத் தரப்புக்கள் அறிவுறுத்தியுள்ளன. எனவே இந்நீரில் கழுவப்படும் மரக்கறி பழவகை மற்றும் கீரை வகைகளை உண்பதால் பொது மக்கள் நோய் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே நகரில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு இப்பொருட்களை இலகுவாக கழுவி துப்பரவு செய்யும் வகையில் குழாய் நீர் வசதிகளை செய்து கொடுக்க நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என நகரவாசிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

தொடங்கொட பிரதேச சபை

கடை அறைகளை குத்தகைக்கு வழங்குதல் - பெறுகை அறிவித்தல்

தொடங்கொட பிரதேச சபைக்குரித்தான வியாபாரத்திற்குப் பொருத்தமான பின்வரும் கடை அறைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் பெறுகை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இடம்	கடை அறை இல.	ஆகக் குறைந்த மாதாந்த வாடகை ரூபா	முற்பணம்
சப்புகஹவத்த பொதுச் சந்தை கட்டிடத் தொகுதி	13	1500.00	220000.00
நேபட பழைய பொதுச் சந்தை கட்டிடத் தொகுதி	129	950.00	128000.00
உணவகக் கட்டிடம்	துடுகல சந்தி	25000.00	-

- பெறுகை படிவங்கள் வழங்குதல் 2022-12-21ஆம் திகதி முதல் 2023-01-02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை தொடங்கொட பிரதேச சபை அலுவலகத்தில்
- பெறுகைப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் 2023-01-03ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை
- பெறுகைப் படிவங்கள் திறக்கப்படுதல் 2023-01-03ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு
- பெறுகைப் படிவக் கட்டணம் ரூபா 2000.00
- அலுவலகத்தினால் வழங்கப்படும் பெறுகை விண்ணப்பங்களை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், தொடங்கொட பிரதேச சபை, தொடங்கொட எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கடை அறைகளை குத்தகைக்கு வழங்குதல் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கே.வி.டி.டீ. விஷ்வ சாந்த,
தலைவர்,
தொடங்கொட பிரதேச சபை.

விசாரணைகள்: 034-2281273
2022-12-19ஆம் திகதி தொடங்கொட பிரதேச சபை அலுவலகத்தில்.

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

65-9758 Toyota Tercel 1997, Car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி , இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071 4 5 4 295 8 . 078067

113 சுகூகி கார்கள் விற்பனைக்கு

WP CAZ-8086 Suzuki Spacia 2018 Car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071454295 8 . 078060

வேலைவாய்ப்பு

325 தொழில்துறை பொது

கம்பஹா, மிரிஸ்வத்த பயர் கடைக்கு அனுபவமுள்ள ஊழியர்கள் தேவை. 0706900980. 078326

Repeat Your ad For Better Offers

வாகனங்கள் விற்பனைக்கு

வாகன இல.	வகை	மாதிரி	வருடம்
கார்			
KL -1XXX	HONDA	DBA - GD8	2007
கெப்			
DAF -5XXX	MAHINDRA	BMT PLUS MDI	2007
லொறி			
DAH -3XXX	MAHENDRA	MAXXIMO	2019
முச்சக்கர வண்டிகள்			
GH -3XXX	BAJAJ	BAJAJ AUTO	2001
JL -5XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2004

வாகன பரிசீலித்தல்களுக்கு:
மெர்கன்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2022 டிசம்பர் 20ஆம், 21ஆம், 22ஆம், மற்றும் 23ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2022 டிசம்பர் 23ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: **2343720 - 7** நீட்சி: **210**

Mercantile Investments and Finance PLC

www.skillsads.com

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொறிந - 071 9530350

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

இலங்கை வங்கி

ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

1. கடன் தொடர்பு இலக்கங்கள் : 83638229

கொழும்பு 07, பிலவர் வீதி, இல.61 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. எம்.ஏ.எஸ்.சாலி என்பவரின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த சேர் ஏர்னஸ்ட் தி சில்வா மாவத்தை, வரிமதிப்பு இல.61/A ஐக் கொண்ட மாடி வீடு, நிலத்தளம், துண்டு 2, அலகு 2 வட்டாரம் இல.36ல் அமைந்த ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2019.06.28ஆம் திகதி 2130ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.06.11ஆம் திகதி தினமின, தினகரன், மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.02.10 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(* 22ஆம் பிரிவின் கீழான மேற்படி விற்பனை அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், ஏல நடைமுறையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் பொருட்டு வாடிக்கையாளர் 3,063,648.00 ரூபாவை வைப்பிலிட்டுள்ளார்)

மேற்குறிப்பிட்ட அட்டவணை ஆதனத்தின் விபரம்

மேல்மாகாணம் கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோரளை பல்லேபற்றுவில் கொழும்பு மா.வ.உ (DRO) பிரிவில் கொழும்பு மாநகரசபை எல்லைகளுள் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் கறுவாத்தோட்டம் கிராம உத்திகோகத்தர் பிரிவு இல.182ல் வட்டாரம் இல.36ல் அமைந்ததும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம்.எஸ்.ரீ.பீ.சேனாதீர தயாரித்த 31.01.1995 திகதியிட்ட கூட்டாண்மை வரைபடம் இல.1917ல் விபரித்த சேர் எர்னஸ்ட் தி சில்வா மாவத்தை, வரிமதிப்பு இல.61Aஐக் கொண்ட அலகு இல.2 துண்டு 2, நிலத்தளம், மாடி வீடு.

வடக்கில் : இத்துண்டையும் அலகு 1 துண்டு 1ஐயும் பிரிக்கும் இத்துண்டின் மத்திய வடக்குச் சுவரும்.

கிழக்கில் : இத்துண்டையும் அலகு 1 துண்டு 1ஐயும் பிரிக்கும் இத்துண்டின் மத்திய கிழக்குச் சுவரும்

தெற்கில் : இத்துண்டையும் சேர் எர்னஸ்ட் தி சில்வா மாவத்தை நிலமனை இல.65ஐயும் பிரிக்கும் இத்துண்டின் மத்திய தெற்குச் சுவரும்

மேற்கில் : இத்துண்டையும் அலகு 1 துண்டு 1ஐயும் பிரிக்கும் இத்துண்டின் மத்திய மேற்கு சுவரும்.

உச்சி : அலகு 5 துண்டு 5 தளத்தின் மத்தியும்

கீழ் : இத்துண்டின் தளத்தின் மத்தியும்

எல்லைகளாகக் கொண்டு தொள்ளாயிரத்து அறுபது சதுர அடி (ச.அ.960) விஸ்தீரணமுடையது.

இக்கூட்டாண்மை அலகுக்கான பகிரப்படாத பங்கு சதவீதம் கூட்டாண்மை ஆதனத்தின் பொது மூலகங்களில் 01.46% ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் CONE126/40 பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை

பொது மூலகங்கள்
கூட்டாண்மை ஆதனத்தின் சட்ட ரீதியான பொதுமூலகங்கள்

1. அ. கட்டிடம் அமைந்திருக்கும் காணி, கால்வாய்கள்
   ஆ. அதே காணியின் மீதிப்பாகம்
2. அத்திவாரங்கள், தூண்கள், மர இரும்பு உத்திரம்கள், ஆதாரங்கள், வடிகால், சாக்கடைகள், மேன்ஹோல்கள் ட்ரான்ஸ் போமரிலிருந்து மீற்றர்கள் வரையான மின்கம்பி, பிரதான மீற்றர்கள் வரையான நீர்க்குழாய்கள், மின்தூக்கிகள், படிக்கட்டுகள், தாழ்வாரங்கள், கால்வாய்கள், கொரிடோர்கள், பாதுகாப்பு அறை, தீ அணைக்கும் உபகரணம், மின்பிறப்பாக்கி, நீர்த்தொட்டி, நீர் இறைக்கும் இயந்திரம், மேற்புறத் தொட்டிகள், மொட்டை மாடித்தோட்டம், எல்லைச்சுவர்கள், கூரை மற்றும் அலகு 1 துண்டு 1.
3. ஏனைய அலகுகளில் விபரித்த பகுதிகள் தவிர்ந்த கட்டிடத்தின் ஏனைய எல்லா கட்டமைப்புகள்.
4. 3 தொடக்கம் 39 வரையான அலகுகளின் PL1 - PL37 என அடையாளமிட்டு ஒதுக்கப்பட்ட வாகனத்தரிப்பிட துண்டுகளை பொதுவாக உபயோகித்தல்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

டப்ளியு.எம்.எச்.ஏ.எஸ்.எஸ்.பீ. ஏகநாயக்க
முகாமையாளர்
(அறவிடல் மற்றும் கடன் கண்காணிப்பு)

இலங்கை வங்கி
தலை நகரக்கிளை

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2022 டிசம்பர் 20 செவ்வாய்க்கிழமை

உலக சம்பியனானது ஆர்ஜன்டீனா

மில்லியன் கணக்கான மக்கள் கொண்டாட்டம்

உலகக் கிண்ணத்தை வென்ற லியொனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜன்டீன அணியை வரவேற்க மில்லியன் கணக்கான ஆர்ஜன்டீன நாட்டு ரசிகர்கள் காத்துள்ளனர்.

நடப்புச் சம்பியன் பிரான்ஸுக்கு எதிரான பரபரப்பான உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆர்ஜன்டீன அணி 4–2 என பெனால்டி சூட் அவுட் முறையில் வெற்றியீட்டியது. கட்டாரின் லுசைலா ஐகோனிக் அரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடந்த இறுதிப் போட்டியை அரங்கில் இருந்து 89,000 ரசிகர்கள் பார்வையிட்டனர்.

1986 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆர்ஜன்டீன அணி உலகக் கிண்ணத்தை சுவீகரித்ததை அடுத்து ஆர்ஜன்டீன தலைநகர் புனோஸ் எயார்சில் உள்ள சதுக்கத்தில் சுமார் இரண்டு மில்லியன் மக்கள் ஒன்று திரண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஞாயிறு இரவு முழுவதும் மக்கள் மகிழ்ச்சியில் கட்டி தழுவியபடி, கொடிகளை அசைத்தவாறு கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தக் கொண்டாட்டங்களில் ஜனாதிபதி அலபர்டோ பெர்னாண்டசும் இணைந்து, அணியின் வெற்றிக்காக தேசத்துக்கு நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

அதேபோன்று உலகக் கிண்ணத்தை வென்ற பின் ஆர்ஜன்டீன அணியினர் திறந்த பஸ் வண்டி ஒன்றில் கட்டார் வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இதன்போது பட்டாசுகள் கொளுத்தப்பட்டு ரசிகர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நாடு திரும்பும் ஆர்ஜன்டீன அணியை வரவேற்க ஆர்ஜன்டீனாவில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அணியினரை வரவேற்கும் நிகழ்வில் மில்லியன் கணக்கான மக்கள் இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.

பரபரப்பாக நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியின் முதல் பாதியில் ஆர்ஜன்டீன அணி ஆதிக்கம் செலுத்தியபோதும் கடைசி நேரத்தில் பிரான்ஸ் முன்கள வீரர் கிலியன் ம்பப்பேவின் இரட்டை கோலால் முழு நேரம் முடிவில் ஆட்டம் 2–2 என சமநிலை பெற்றது.

வழங்கப்பட்ட மேலதிக நேரத்திலும் இரு அணிகளும் தலா ஒரு கோல் பெற 3–3 என சமநிலையானது. இதனால் முடிவை தீர்மானிக்கும் பெனால்டி சூட் அவுட்டில் ஆர்ஜன்டீன கோல் காப்பாளர் எமிலியானோ மார்டினஸ் பிரான்ஸின் இரு முயற்சிகளை தடுத்ததால் ஆர்ஜன்டீனாவின் வெற்றி உறுதியானது.

இதில் தொடர் நாயகனுக்கான தங்கப்பந்து விருது மெஸ்ஸிக்கு கிடைத்ததோடு, தொடரில் அதிக பட்சம் எட்டு கோல்களை பெற்ற ம்பப்பேவுக்கு தங்கப் பாதணி கிடைத்தது. ஆர்ஜன்டீன கோல் காப்பாளருக்கு தொடரின் சிறந்த கோல் காப்பாளருக்கான தங்கக் கையுறை விருது கிடைத்தது. இளம் வீரருக்கான விருது ஆர்ஜன்டீனாவின் 21 வயது மத்திய கள வீரர் என்சோ பெர்னாண்டஸுக்கு கிடைத்தது.

உலகக் கிண்ணத்தை வென்ற ஆர்ஜன்டீன அணிக்கு 42 மில்லியன் டொலர் பரிசு கிடைத்ததோடு இரண்டாவது இடத்தை பெற்ற பிரான்ஸ் 30 மில்லியன் டொலரை வென்றது.

அடுத்த பிஃபா உலகக் கிண்ண கால்பந்து போட்டி 2026 ஆம் ஆண்டு ஜூன் – ஜூலையில் கனடா, மெக்சிகோ மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

மெஸ்ஸியின் ஓய்வு முடிவில் மாற்றம்

உலகக் கிண்ணத்தை வென்ற ஆர்ஜன்டீன அணித் தலைவர் லியோனல் மெஸ்ஸி தனது ஓய்வு முடிவில் மாற்றத்தை வெளியிட்டுள்ளார்.

“தேசிய அணியில் இருந்து நான் ஓய்வுபெற மாட்டேன். ஒரு சம்பியனாக தொடர்ந்து ஆட விரும்புகிறேன்” என்று உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய பின் அளித்த பேட்டியில் 35 வயதான மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ண இறுதிப் போட்டியுடன் உலகக் கிண்ணத்தில் இருந்து ஓய்வுபெறப்போவதாக மெஸ்ஸி முன்னதாக குறிப்பிட்டிருந்தார்.

2005ஆம் ஆண்டு ஆர்ஜன்டீனாவுக்காக சர்வதேச போட்டிகளில் களமிறங்கிய மெஸ்ஸி, 2006இல் முதல் முறை உலகக் கிண்ணத்தில் ஆடினார். அடுத்த உலகக் கிண்ணப் போட்டி 2026 ஆம் ஆண்டே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“இந்த ஒரு தருணத்திற்காக வாழ்நாள் முழுக்க ஏங்கி இருக்கிறேன். ஆனால் கடவுள் ஒருநாள் உலகக் கிண்ணம் என்னும் பரிசை எனக்கு வழங்குவார் என்று தெரியும். இந்த உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பிக்கும்போது, இது எனது தொடர் என்ற உணர்வு எனக்குள் இருந்தது. இந்தக் கிண்ணத்தை என் கையில் ஏந்த கொஞ்சம் அதிக காலம் காத்திருக்க வேண்டியதாயிற்று” என்று மெஸ்ஸி உலகக் கிண்ண வெற்றிக்கு பின்னர் குறிப்பிட்டார்.

கனிஷ்ட கொல்ப் போட்டி இன்று

இலங்கை கனிஷ்ட திறந்த கொல்ப் மற்றும் பிராந்திய கொல்ப் தொடருக்கு 14ஆவது ஆண்டாகவும் பிரீமா சன்ரைஸ் பாண் அனுசரணை வழங்குகிறது. இந்த போட்டி இன்று (20) தொடக்கம் வரும் 22ஆம் திகதி வரை ரோயல் கொழும்பு கொல்ப் கழகத்தில் நடைபெறவுள்ளது.

உலக அமச்சூர் கொல்ப் தரவரிசைக்கான ஓர் அளவுகோலாக இந்தப் போட்டி கருதப்படுகிறது. இலங்கை கொல்ப் நிறுவனத்தால் இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் முன்னணி கால்பந்தாட்ட கழகங்களில் ஒன்றான பேருவளை சீனன்கோட்டை சன்ரைஸ் விளையாட்டுக் கழகத்திற்கு சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரண தொகுதியை பிரேமியர் இன்டர்னசனல் உரிமையாளர் பைஸர் ஹுஸைன் வழங்கிய நிகழ்வில் எடுக்கப்பட்ட படம். (படம்: பேருவளை விசேடம்)

தாய்லாந்தில் போர் கப்பல் மூழ்கி 31 வீரர்கள் மாயம்

தாய்லாந்து வளைகுடாவில் 100க்கும் அதிகமான கடற்படை வீரர்களுடன் சென்ற தாய்லாந்து போர் கப்பல் ஒன்று மூழ்கியதில் 31 பேர் காணாமல்போயுள்ளனர்.

மின் கட்டுப்பாட்டகத்தில் நீர் நிரம்பியதை அடுத்தே கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தப் போர் கப்பல் மூழ்கியுள்ளது. 75 பேர் மீட்கப்பட்ட நிலையில் கொந்தளிப்பான கடலில் தொடர்ந்தும் 31 பேர் காணாமல்போயிருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

“12 மணி நேரம் கடந்த நிலையிலும் நாம் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டுள்ளோம்” என்று கடற்படை பேச்சாளர் ஒருவர் நேற்று தெரிவித்திருந்தார்.

உயிர் தப்பியோரை தேடும் மீட்பு நடவடிக்கை ஞாயிறு இரவு முழுவதும் நீடித்த நிலையில் நேற்று திங்கட்கிழமையும் அது தொடர்ந்தது. 3 கடற்படைக் கப்பல்களும் 2 ஹெலிகொப்டர்களும் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளன.

காற்று வேகமாக வீசுவதால் மீட்பு பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. கப்பலில் புகுந்த நீரை வெளியேற்ற எந்திரங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. கடந்த சில நாட்களாக வடக்கு மற்றும் மத்திய தாய்லாந்தில் கடுமையான குளிர் நிலவுகிறது. தெற்கு தாய்லாந்தில் புயல்கள் ஏற்பட்டு கடுமையான வெள்ள பாதிப்பும் ஏற்படுகிறது. கப்பல்களை கரையில் நிறுத்தி வைக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செய்திகள்

படகில் நிர்க்கதியானோரை காப்பாற்ற ஐ.நா அழைப்பு

சுமார் 150 ரொஹிங்கிய அகதிகளை ஏற்றிய படகு ஒன்று மின்சாரம் இன்றி கடந்த இரண்டு வாரங்களாக கடலில் தத்தளிக்கும் நிலையில் தென் கிழக்கு ஆசியாவில் அந்த மான் கடல் பகுதியை சூழவுள்ள நாடுகள் அவர்களுக்கு உதவும்படி ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

அந்தப் படகில் இருப்பவர்கள் செய்மதி தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டுள்ளனர். சிறுவர்கள் உட்பட கணிசமான பயணிகள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்துள்ளனர்.

உணவு மற்றும் குடிநீர் தீர்ந்து வருவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கோரிக்கையை ஐ.நா கடந்த வெள்ளிக்கிழமையே விடுத்திருந்தபோதும் இதுவரை எந்த நாடும் உதவி வழங்க முன்வரவில்லை.

தெற்கு பங்களாதேஷில் இருந்து கடந்த மாதம் புறப்பட்டிருக்கும் இந்த சிறிய படகு மூன்று வாரங்களுக்கு மேலாக கடலில் நிர்க்கதியாகியுள்ளது.

படகு மலேசியாவை அடைய முயன்றிருப்பதோடு அதன் எஞ்சின் சில நாட்களுக்கு முன் செயலிழந்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 20ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.